www.tamilarangam.net

Raya

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE : FRANCE

# கலை விளக்கு

தீபம் - 24 கல்வி கலை கலாச்சார இலக்கியச்சுடர்.



Mrs.M.Haarmann,Caritasverband e.V.,
D-4600 Dortmund 1.

ஆசிரியர். எஸ். பி. நாதன்

20.6.90 வைகாசி - ஆனி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நூல் அறிமுகம்




நூலின்பெயர் - விடுதலை வேட்கை.
ஆசிரியர் - முத்துசொக்கன்
பதிப்பு - முதலாவது
ஆண்டு - 1990
வெளியீடு - - - - - - - - ->

M. Socklingasamy
Sachsen str. 76
4350 Recklinghausen
West Germany.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எம் மனதில் உதிப்பவை

இரண்டாம் உலகப்போரினால் பல வழிகளிலும் சின்னாபின்னப்படுத்தப்பட்டு, ஏறக்குறைய இருபத்தைந்து வருடங்களின் பின்னர் புதுஉலகமென மலர்ச்சி பெற்றது. பல விஞ்ஞான முன்னேற்றங்களைப் பிறப்பித்தன என்பவை பற்றி எல்லாம் நாம் முன்னர் பாடப்புத்தகங்களிலும், பத்திரிகைகள், சஞ்சிகைகளிலிருந்து அறிந்துகொண்டோம். ஆனால் சிலருக்கு (எம்மில்) எழுபதாம், எழுபத்தைந்தாம் காலகட்டங்களில் ஜேர்மனியை நேரடியாகப் பார்க்கும் வாய்ப்புக்கள் இருந்தன. இதற்கு முன்னரும் இருந்தன. ஆனால் அரிதாகவே இருந்தன எனலாம்.

1980ம் ஆண்டளவில் ஜேர்மனியை நேரடியாக நோக்கும் வாய்ப்பு எமக்கு கிடைத்தது. ஜேர்மனிய மக்களின் வாழ்க்கை முறைமை, அவர்தம் பண்பாடு, பொருளாதார அபிவிருத்தி, என்பவற்றைக் கூர்ந்து அவதானித்தமையின் வெளிப்பாடாகவே "சிந்திக்கத் தூண்டிய ஜேர்மனிய கலாச்சாரம்" எனும் நூல் 1984 ம் ஆண்டு ஸ்ருட்காட் மாநிலத்தில் வெளியீடு செய்யப்பட்டது.

1986 ம் ஆண்டு டோற்முண்ட் நகரில் தமிழ்ச் சஞ்சிகை ஒன்றை ஆரம்பிக்கவேண்டும் என்ற நோக்குடன் திருமதி. எம். கார்மன் (கரிதாஸ் டோற்முண்ட்) அவர்களின் உதவியையும் ஆலோசனைகளையும் நாடினோம். தமிழ்மக்களுக்காகத் தமிழ்ச் சஞ்சிகை ஒன்றை மாதாமாதம் வெளியிட முயற்சிப்பதை நான் வரவேற்கிறேன், என்றும் தம்மால் முடிந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உதவிகளைச் செய்து தருவதாகவும் வாக்களித்தார் அந்த அம்மையார். அந்த வாக்குப் பலித்தமையினாலேயே இன்றுவரை இக்கலைவிளக்கு' உங்கள் முன்னர் சுடர்விட்டுக் கொண்டிருக்கிறது என்று கூறுவதில் மகிழ்வடைகின்றோம்.

1986 மார்கழி மாதம் ஜனனித்த கலைவிளக்கு சஞ்சிகை தற்பொழுது மூன்றரை வருட அகவையை எட்டிப்பிடித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பூரிப்பை வெளிப்படுத்தும் நோக்கமாகவே பங்குனி-சித்திரை 1990 இதழ் திருமதி. கார்மன் அம்மையாரின் நிழற்படத்தை அட்டைப்படமாகத் தாங்கி வந்துள்ளது. ஆரம்ப காலகட்டங்களில் 75 பிரதிகள் வெளிவந்து இப்பொழுது 300 பிரதிகள் வெளிவரவேண்டிய நிலையை கலைவிளக்குச் சஞ்சிகை பெற்றுள்ளது. இச்சஞ்சிகை வளர்ச்சிக்கு திருமதி. கால்வூஸ் (கூரிதாஸ் லூனன்) அவர்களும் இன்று வரை உதவிசெய்து வருகின்றார். இவரின் உதவியையும் நாம் மறத்தல் முடியாது. இவ்வேளையில் திருமதி. கால்வூஸ் அவர்களுக்கும் நன்றி கூறக்கடமைப் பட்டுள்ளோம்.

திருமதி. எம். கார்மன் (MRS. M. HAARMANN) அவர்கள் தமிழ் மக்களுக்குச் செய்து வரும் சேவைபற்றி, அவருக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக, "சமூகசேவகி" என்ற தலைப்பில் சிறுநூல் ஒன்றைக் கலைவிளக்கு வெளியீடு செய்யவுள்ளது. இதற்குப் பல வாசகர்கள் ஆதரித்து, தாமும் கட்டுரைகள், வேறு ஆக்கங்கள் தரலாமா? என்று கேட்டுக் கொண்டதின் பேரில் அவர்கள் ஆக்கங்களுக்கும் இடம் கொடுக்கப்பட்டுள்ளன. தனிப்பட்ட நூலாக வெளிவர இருந்த இந்நூல் ஏனையோரின் அபிலாசைகளுக்கும், வாழ்த்துச் செய்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து அவற்றையும் சுமந்து வரும் என்பதையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

திருமதி. கார்மன் அவர்களின் சேவையை நாம் எழுத்து வடிவிற் பொறித்தாலும், அவர் சேவைக்கு எதுவும் ஈடாகாது. டோற்மூண்ட் வாழ் தமிழ்மக்களுக்கு மட்டுமன்றி ஏனைய நகரமக்களுக்கும் வேண்டியவிடத்து உதவி செய்துவருகின்றார். பொதுவாக ஒருநகரத்தின் 'கரிதாஸ்' நிர்வாகம் அந்தந்த நகர மக்களுக்கே உதவி செய்யும். ஆனால் திருமதி. கார்மன் அவர்கள் ஏனைய நகர மக்களுக்கும் ( சகல வெளிநாட்டவர் ) தமது நேரத்தை ஒதுக்கி வருகிறார். இத்தகைய சேவை செய்யும் சேவகிக்கு எம்மால் ஒரு சிறிய நூலை வெளியீடு செய்வது தமிழர்க்குப் பெருமையே. இந்நூல் சிறிது காலதாமதமாக வெளிவந்தாலும் மிகவும் சிறப்பாக, எல்லாவிடயங்களையும் தாங்கி அச்சுருவத்தில் வெளியாகும்.

மூன்றரை ஆண்டுகளைத் தாண்டிக் கொண்டிருக்கும் 'கலைவிளக்கு' சஞ்சிகையின் வளர்ச்சிக்கு மூலகர்த்தாக்கள் அருமை வாசகர்கள் என்பதை ஒருபோதும் மறக்கமுடியாது. மேன்மேலும் வாசகர்களின் ஆதரவு, அவர்தம் ஒத்துழைப்பு தொடர்ந்து இச்சஞ்சிகைக்கு கிடைக்கும் என்பது எமது அசையா நம்பிக்கையாகும். காலத்துக்குக் காலம் அரும்பிக்கொண்டு வரும் அனைத்துத் தமிழ்ச் சஞ்சிகைகளுக்கும், ஏனைய வளர்ந்து வரும் சஞ்சிகைகளுக்கும் நேசக்கரம் நீட்டி வரவேற்கிறது கலைவிளக்கு.

ஆ-ர்

***



www.tamilarangam.net

# ஒளிரட்டும் கலைவிளக்கு

ஆண்டுகள் மூன்றினையே அமைதியுடன்
கொண்டாடும் கலைவிளக்கின் ஒளி
தமிழர் தம் வாழ்விட மெல்லாம்
தண்ணொளி கொண்டு ஒளிரட்டும்.

மாயை இருள் கொண்ட மனிதருள்ளத்தில் – நீ
காய்தலின்றி உன் சுடர் பரப்பிடுவாய்!
ஆய்ந்துன் அறிவினால் இன்னல் தனை எதிர்கொண்டு
தாயகம் நீங்கிய அகதிகள் எமக்கு ஒளியானாய்.

உலகத் தமிழர்களுக்கும் ஒளிபரப்பும் நீ
அறிவு என்னும் பயிருக்கு கல்வியெனும் நீர் பாய்ச்சி
காலமெல்லாம் வாழ்க, கலைவிளக்கே!
கலாச்சாரம் தனைக் கவினுற வளர்க்கின்றாயே.


இன்தமிழ்க் கலைவிளக்கே இலக்கியச்சுடர் பரப்பி
இன்னும் ஆண்டுகள் மூன்றென்ன? மூவாயிரம்
ஆண்டுகள் ஒளிபரப்பி நீ நிலைத்திடவே
தேன் தமிழ்க்கவி மாலை சூட்டுகிறேன் இன்று.

முத்துக்குமரன் –



www.tamilarangam.net

# வாழ்க்கை ஒரு



# பூந்தோட்டம்

--சிவரஞ்சன் --

வாழ்க்கை என்பது மனிதஜீவனின் உயிர்ப்பின் பின், தாயின் கருவறையில் ஒன்பது மாதம் தங்கிய பின், புவியில் பிறந்தநாள் ஆரம்பித்து, புவியைவிட்டு தான் உயிர் பெற்றஅந்தத் தேவனிடத்தில் மீண்டும் போய் சேரும்வரை, அந்த ஜீவனின் உயிருள்ள போராட்டம் தான்.

அந்த வாழ்க்கை எனும் பூந்தோட்டத்தில் அன்பு, பாசம், காதல், கருணை, இலட்சியம், ஆசை, கற்பனை, என்ற வாசனையுள்ள பூக்களும், பொறுமை, ஆசை, ஆணவம், பகை, கவலை, தாழ்வுமனப்பான்மை, வஞ்சகம், என்ற துர்மணமுள்ள பூக்களும் காணப்படுகின்றன. இந்தப் பூந்தோட்டத்தில் வண்டுகளின் நடமாட்டம்கூடுதலாக எல்லா இடமுமே காணப்படும். எல்லாவற்றிலும் ஏதோவொரு குறை இருப்பினும் எல்லாப் பூக்களும் நல்லபூக்களாகக் காணப்படுவதே காரணம்.

மனிதனுடைய இந்தவாழ்க்கை ஒருபோதும் நிலையாக இருப்பது, ஒருபோதும் நிச்சயமில்லை. ஆனால் மனிதனுடைய ஒவ்வொரு ஆசையும் வளர்ந்துகொண்டு போகின்றது. மனிதனின்இலட்சியம் என்ன?என்று நோக்கினால் வாழ்க்கையில் சந்தோஷம் ஏற்படவேண்டும். மனிதன் வாழக்கூடிய முறைகள் மூன்று. 1. எப்படியும் வாழலாம். 2. இப்படித்தான் வாழவேண்டும் 3. இப்படியும் வாழலாம் என்ற சோம்பலான வாழ்க்கைமுறை.

வாழ்வில் நாம் ஏதோவித நாடகபாத்திரத்தை

www.tamilarangam.net

ஏற்று நடித்து வருகின்றோம். வாழ்க்கை சிலருக்கு இனிப்பாகவும், சிலருக்கு கசப்பாகவும் இருக்கும். வாழ்க்கையில் ஏற்பட்ட சில கசப்பான சம்பவங்கள் மூலம் எழுந்த சோக எண்ணங்களால் வாழ்வில் ஏமாற்றம் ஏற்படலாம். கவலைகள் எது வந்தாலும் அதைச் சகித்துப் பொறுத்து வாழப்பழகிக்கொள்ள வேண்டும். இவ்வுலகில் ஆண்டவன் படைப்பில் நமக்கும் உரிமையுண்டு. அவனது மகத்தான சக்தியின் துணைகொண்டு, அவனது நம்பிக்கையுடன் வாழப்பழகிக் கொள்ளுதல் நம்கடனுகும். கஷ்டங்களைப் பெரிதுபடுத்தும் போது அது பெருகிக்கொண்டு போவது போலவே தோன்றும். நன்மையையும் மகிழ்ச்சியையும் பெரிது படுத்தும் போது நமக்கு நன்மையும் நம்மைச் சுற்றி மகிழ்ச்சியும் நிறையும். பழைய தோல்விகளை, ஏமாற்றங்களை மறந்து புதிய மகிழ்ச்சியான வெற்றிச் சம்பவங்களில் மனம் அசைபோட வேண்டும்.

சிக்கலான சில பிரச்சினைகள் ஏற்படும்போது அதைப்பல வழிகளிலும் அலசுங்கள். தீவிரமாக எண்ணிப் பின்பு விட்டுவிடுங்கள். பின் அதை அப்படியே மறந்துவிட்டு வேறு வேலைகளில் ஈடுபடுங்கள். மனம் தானுக வழிகாட்டும் என்கிறார்கள் மனேதத்துவ ஞானிகள். நிகழப்போகும் நிகழ்ச்சிகளை எப்படியிருக்கும் என்று எண்ணுங்கள். மனதிலொரு எதிர்பார்க்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். உங்கள் ஆழ்மனம் உங்களுக்கு உதவும் என்கிறார்கள் அதே ஞானிகள். பிரச்சினைகள் தோன்றும் போது அதைத்தீர்க்க நான்கு வழிமுறைகளைக் கையாளமுடியும். எமது பிரச்சினை என்ன? என்ன முடிவை எதிர்பார்க்கிறோம்? அது நல்ல முடிவாக வர எவற்றைக் கையாள வேண்டும்? சிறந்த வழியைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் தீர்த்துக்

www.tamilarangam.net

கொள்ளல், என்பனவாம்.

மனிதனுக்குப் பகுத்தறிவு அவசியம். பிரச்சினைகளைப் புலனறிவால் உணர்ந்து, பகுத்தறிவால் உணரும் போது அவற்றை வெற்றி கொள்ளக்கூடியதாக இருக்கும். நம்மை அறியாது நாம் ஏற்படுத்திக் கொண்ட சில மனப்பழக்கங்கள், கிடைப்பதை விட்டு கிடைக்காததை எண்ணி ஏங்குதல், காரியங்களை முடிக்காமற் பாதியில் விட்டுவிடும் அவநம்பிக்கையும், தாழ்வு மனப்பான்மையும், கையாலாகாத்தனமும், பிறர் என்ன சொல்வார்களோ என்று அஞ்சும் பேதமையும் மனதிற் தோன்ற சிலர் செய்வதறியாது வருந்துவார்கள். மேலும் சென்றதை எண்ணிக் குமையும் சீரழிவு, சிறிய விஷயங்களையும் பெரிது படுத்தும் சிலரது பொழுது போக்கு, எதிலும் குற்றம் கண்டுபிடித்து தம் வாழ்க்கையையும், பிறர்வாழ்க்கையையும் நரகமாக வைத்துக்கொள்ளும் சிலரது சிந்தனையோட்டம், தன்னைத்தானே நொந்து தன்னைத்தாழ்த்திக்கொண்டு வாழும் ஜீவன்கள், எனப் பலதரப்பட்ட வகையில் மனித இனம் வாழ்ந்துகொண்டிருக்கிறது.

எல்லோருக்கும் ஆசை இருக்கின்றது. திட்டங்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றைச் செயற்படுத்த வரும் போதுதான் மனிதர்கள் வித்தியாசப்படுகின்றார்கள். பொறாமை பகைமை, போட்டி என்பவும் இவற்றை அண்டியே ஆரம்பமாகின்றன. பயம், நோய், கவலை, சந்தேகம், என்பன மனிதனின் எதிரிகள். பயத்தாலும், கவலையாலும் மனிதன் தன் வாழ்வை நரகமாக்கிக் கொள்கின்றான்.

கவலைக்கு முதற்காரணம் சும்மா இருப்பது ஆகும். சும்மா இருக்கும்போது மனம் பலவற்றை எண்ணுகிறது. இதனால் நோயாளி கவலையடைகின்றான். காரியம் ஏற்படுமுன் உருவாகும் பயம், கவலையாக மாறி அக்காரியமே அவனுக்குப் பெருஞ்சுமையாக உள்ளது. ஆனால் சுறுசுறுப்பாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருப்பதன் மூலமும், காரியங்களை உடனுக்குடன் முடிப்பதன் மூலமும் கவலையிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். பகைமையும் பொறுமையும் மனிதநிம்மதியைக் கலைத்து விடுகின்றன. பிறரது வளர்ச்சியைக் கண்டு பொறுமை கொள்பவர்கள் ஒருபோதும் நிம்மதியாக வாழமுடியாது. எனவே தீய எண்ணங்களை அகற்றுங்கள், நல்லதையே எண்ணுங்கள், மற்றவர்களை மதியுங்கள், மற்றவர் குறைகளை மறவுங்கள்– மன்னியுங்கள்! அப்போது உங்கள் மனம் லேசாவதை நீங்களே உணர்வீர்கள்.

ஆம், உங்கள் வாழ்வு இன்பத்துடன் மலர்ந்திட பொறுமை, வெறுப்பு, பகை, என்பவற்றை அகற்றி, வெறுப்பவர்கள், பொறுமைப்படுபவர்களை மன்னியுங்கள். அவர்களுக்கு அன்பையும் பாசத்தையும் காட்டுங்கள். நன்றியுள்ளவராயிருங்கள்! ஆணவம் இன்றித் தாழ்வுமனப்பான்மையை அகற்றி, வாழுங்கள்! வாழப்பழகுங்கள்! அப்போதுதான் உங்கள் வாழ்க்கைப் பூந் தோட்டத்திலே உள்ள அனைத்துப் பூக்களும் வாசனைமலர்களாக மலர்ந்து மணங்கொடுக்கும். எதிர்காலம் என்றும் ஒளியுடையதாக இருக்கும்.



கலைவிளக்கு சஞ்சிகைக்கு ஊக்கமளித்து உதவி செய்யும் திருமதி. கால்வூஸ் ( FRAU. KALFUES , CARITAS VERBAND LÜNEN e.V ) அவர்களுக்கும் எமது நன்றி உரித்தாகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாம் வாழவேண்டும்

- நகுலா -

கருணையுடைய நெஞ்சம் வேண்டும் - பிறர்
கண்ணீர் துடைக்கும் கரம் வேண்டும்.
அருளைச் சொரியும் நெஞ்சம் வேண்டும் - தூய
அன்பைச் செலுத்தும் மனம் வேண்டும்
இருளை அழிக்கும் ஒளி வேண்டி - மனம்
இளகிக் கசிந்துருக வேண்டும்
பொருளும் பணமும் சேர்க்க வேண்டிப் - பொய்
பேசாத உண்மை நெஞ்சில் வேண்டும்

அன்பால் உயர்ந்த பெண்மை வேண்டும் - நல்
அறிவால் உயர்ந்த ஆண்மை வேண்டும்
இன்பவுலகில் இருவரும் கருத்தொருமித்து - நல்
இனிய மழலை பெறவேண்டும்.
துன்பம் சகிக்கும் உளம் வேண்டும் - என்றும்
தூய்மையுடைய மனம் வேண்டும்.
வன் பாவமத்தனையும் நீக்கி - நாம்
வாழத் தெரிந்துகொள்ள வேண்டும்.

உறுதியுடைய மனம் வேண்டும் - தெய்வம்
உண்மை என்று நாமுணர வேண்டும்
பொறுமையுடைய குணம் வேண்டும் - புகழ்
பொங்கும் செயல் புரிய வேண்டும்
வறுமையற்ற வாழ்வு பெற வேண்டும் - இனிய
வார்த்தை நம் வாக்கில் நிதம் வேண்டும்
மறுமை வந்து சேரினும் நற்பண்பை - நம்
மனதில் வைத்து நாம் வாழவேண்டும்.

www.tamilarangam.net



# மேற்குஜேர்மனி தமிழ்க்கல்விச்சேவை

## தமிழ்மொழிப் பரீட்சை

மேற்கு ஜேர்மன் தமிழ்க்கல்விச் சேவையால் நடாத்தப்படவிருந்த தமிழ்மொழிப் பரீட்சையானது, கடந்த 5.5.90 குறிப்பிட்ட பல நகரங்களில் நடைபெற்றது. டோற்மூண்ட், ஹேர்ண, விற்றன், றெம்சைட், ஓபகௌசன், போகும், ஹாணன், வேர்ண, என்னம்பெற்று, போன்ற இடங்களில் உள்ள மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றினார்கள். பரீட்சார்த்திகள் அதிகமாகத் தோற்றிய நகரங்களில் அந்தந்த நகரமே பரீட்சைநிலையமாகக் கொடுக்கப்பட்டது. குறைவாகத் தோற்றிய நகர மாணவர்களுக்கு அருகில் உள்ள நகரங்களே பரீட்சைநிலையமாகக் கொடுக்கப்பட்டது. இப்பரீட்சைக்கு பாடசாலை மாணவர்களும் தனிப்பட்ட மாணவர்களும் தோற்றமளித்தனர். மாணவர்கள் ஒவ்வொருவரும் பரீட்சை மண்டபத்தில் சுட்டெண்களுக்கு முன்னே அமர்ந்திருந்த காட்சியும், பரீட்சை மேற்பார்வையாளரின் பொறுப்பான தன்மைகளும் பார்ப்போர்க்கு தாயகத்தில் நடைபெறும் பரீட்சையை நினைவுறுத்தின எனலாம்.

இப் பரீட்சையின் பெறுபேறுகள் காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும் என மே.ஜே.த. கல்விச்சேவைக்குழுவின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யானைக்கும் அடி சறுக்கும்

மாலதி

யானையின் உடல் எல்லா மிருகங்களையும் விடப் பெரியது. உடலுக்கு ஏற்றாற் போல உறுதியான கால்களும், அகலமான பாதங்களும் உண்டு. யானை வேகமாக நடந்தாலும் நிதானமாக நடக்கும் சுபாவம் உடையது. இத்தகைய யானைக்கும் சில சமயங்களில் கால் சறுக்குவதும் உண்டு.

யானை பெரியதாக இருந்தாலும் அதற்குக் கூட அடி சறுக்கிவிடும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவது போல, கற்றறிந்த மேதைகளுக்கும் தவறுகள் சிலவேளைகளில் ஏற்பட்டுவிடுகின்றன. ஒழுக்க சீலர்களும் சில தவறு விடக் கூடும். எப்போதோ ஒன்று அசாதாரணமாக நடந்து விட்டது என்பதற்காக ஒருவர் மீது குறை காண்பது முறையல்ல என்று இந்தப் பழமொழி எடுத்தியம்புகின்றது.

சிறிய தவறுகளை வைத்துக் கொண்டு பெரியவர்களை, கற்றோர்களை, அநுபவசாலிகளை, நாம் சுலபத்தில் எடைபோட்டு விடக்கூடாது. தவறு ஏற்படுவது எல்லோருக்கும் சகஜம்; என்ற மனோபாவத்தில் விஷயங்களை அணுகவேண்டும். ஒருவரிடமுள்ள குறைகளையே பெரிது படுத்திக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. இதனையே யானையை உதாரணமாகக் கொண்டிருக்கின்றது இந்தப் பழமொழி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யானை உருவத்தால் பெரியது மட்டுமல்ல, பலத்தாலும் வலிமை வாய்ந்தது. அதனுடைய பலத்தை மனிதன் தனக்குச் சாதகமான எத்தனையோ காரியங்களுக்குப் பயன் படுத்திக் கொள்கின்றான். அதுபோல பெரியவர்கள் சமூகத்துக்குப் பயன்படும் எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்கின்றார்கள். அவர்களையும் மீறிச் சில சந்தர்ப்பங்களில் அவர்கள் தவறு செய்துவிடக் கூடும். அவர்கள் செய்த நல்லவற்றை மறந்துவிட்டு, ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அவர்கள் செய்துவிடும் தவறினைப் பூதக்கண்ணாடி வைத்துப் பெரிது படுத்திப் பார்ப்பது முறையல்ல.

பலசாலிகளுக்கும் பலவீனங்கள் இருக்கக் கூடும். மேடைப் பேச்சாளருக்கும் சில வேளை நடுக்கங்கள் இருக்கக் கூடும். பொதுவாக எந்த மனிதனும் நூற்றுக்கு நூறு நல்லவனுமல்ல, கெட்டவனுமல்ல இவ் பதில். நன்மையும் தீமையும் கலந்தது தான் வாழ்க்கை. நன்மையைப் பாராட்டும் மனப்பான்மை வளர்த்துக் கொள்ள வேண்டும். தீமைகளைப் பெரிது படுத்தக் கூடாது.

ஒருவனிடம் நல்லகுணங்கள் மேலோங்கியிருந்தால் அதைச் சிலாகித்து, உற்சாகப்படுத்திக் கைகொடுக்க முன்வர வேண்டும். ஒன்றிரண்டு குறைகள் இருந்தாலும் மிகுதியான நல்லவற்றுக்கு மதிப்புப் பார்த்து, அவை சாதாரணமானவை என்று புரிந்துணர்வுடன் வாழ்ந்தால் வாழ்க்கையின் தேவையற்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பல பிரச்சினைகளைத் தவிர்த்து விடலாம். ஏனெனில் "யானைக்கும் அடி சறுக்கும்" என்பது போலாகும்.

பெரியவர்களும் தவறு செய்து விடக்கூடும். அதைப் பெரிது படுத்தாமலிருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். நீங்கள், தவறுகளைப் புரிந்து அவை மானிடர்க்குச் சகஜம் என்று ஒவ்வொரு மனிதரும் பரஸ்பர நல்லுறவுடன் வாழ்ந்தால் சமூகத்தில் பிரச்சினைகளோ, சண்டைகளோ, கருத்து வேறுபாடுகளோ. தோன்ற இடமிருக்காது.

தவறுகள் நம் வாழ்க்கையில் ஏற்படாமல் வாழ்வது கத்தியின் மேல் நடப்பதற்கு ஒப்பான செயலாகும். அவ்வாறு வாழ்பவர்கள் அறிவுஜீவிகள் எனப்படுவர். ஆனால் தவறுகள் இவருக்கு எப்போ என்று சொல்லிக் கொண்டு வருவதில்லை. எனவே தவறுகள் ஏற்படாமல் வாழ முனைய வேண்டும். அவ்வாறு தான் ஒருவர் தவறிழைத்தாலும் அது சகஜம் என்று பொறுத்துக் கொண்டு, அவர் செய்த நன்மையைப் பற்றிப் பேசுவதே மனிதாபிமான செய்கையாகும்.

நம்முடைய மனப்பான்மையே துன்பத்தை இன்பமாகவும், இன்பத்தைத் துன்பமாகவும் எடுத்துக் கொள்கிறது.

–சுபாஷ் சந்திரபோஸ்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யானையும் பூனையும்



## உருவகம்

மாலைநேரம் காட்டுப்பூனை ஒன்று, பசியால் இரைதேடி அலைந்துகொண்டிருந்தது. தன் பசிக்கு எதுவும் அகப்படவில்லையே, எதை உண்ணலாம்? என வருந்திக் கொண்டு, சுற்றுமுற்றும் பார்த்தவண்ணம் சோர்ந்து உட்காந்திருந்தது. அப்போது எதிரே ஒரு பெரிய யானை வருவதைக்கண்டதும் பற்றைக்குள் ஓடி ஒளித்துக்கொண்டது. யானையோ தன் மனம் போனபடியே வழியிற் பற்றிப்படர்ந்திருந்த செடிகொடிகள், கனிகள், புற்கள் என்பவற்றை உண்டு மகிழ்ச்சியுடன் வந்ததைக் கண்ட பூனைக்குப் பொருமையாக இருந்தது. அதன் மனதில் ஒரு சந்தேகம் எழுந்தது. எனக்குப் பெயர் பூனை. அந்த மிருகத்துக்குப் பெயர் யானை. எம் பெயர்களில் சிறு ஒற்றுமை இருக்கின்றது. ஆனால் உருவத்தில் இந்தப் பெரிய வேற்றுமையை ஆண்டவன் ஏன் படைத்தான்? எனக்கு அசையும் வர்க்க உணவுகளையும் யானைக்கு அசையா உணவு வர்க்க உணவுகளையும் அவன் படைத்துள்ளான். புல், பூண்டு, செடி, கொடி, தாவரம் என்பன அசையா வர்க்க உணவுகள் தானே, இது போல எனக்கும் கிடைத்தால் நான் சாப்பாட்டுக்கு அலையவேண்டியதில்லை, . . . எனக் காட்டுப்பூனை யோசித்தது.

வெகுலாவகமாக இலைகளை மென்று கொண்டிருந்த யானையை நோக்கி, அந்தப் பூனை சிறிது அச்சத்துடன் நெருங்கி, யானை மகாராஜாவே! இந்தப் பெரிய உருவத்துடன் எப்படியெல்லாம் இந்தவனத்துக்குள் உலவி வருகிறீர்கள்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆச்சரியமாக இருக்கிறதே, என்று கூறியது.

ஓ பூனையாரே! அதுவா?...அவரவர்க்குள்ள வல்லமை அது. எனக்கு அப்படி ஒரு சிரமமும் இல்லை என யானை பகர்ந்தது.

பூனைக்கோ யானைமீது மேலும் பொறுமை வந்தது. மீண்டும் யானையை நோக்கி, உங்களை எல்லாம் இந்த மானிடக் கவிஞர்கள் எப்படி எப்படியெல்லாமோ வர்ணிக்கிறார்கள், விமர்சிக்கிறார்கள். கவிஞர் மட்டுமல்ல ஏனையவர்களும் வர்ணித்திருப்பதை நான் எப்போ படித்திருக்கிறேன். உங்களைக் கண்டால் ஆசைப்படுகிறார்கள், போற்றுகிறார்கள், வளர்க்கிறார்கள். ஆனால் எங்களைக் கண்டால் வெறுக்கிறார்கள், அரவணைப்பதும் இல்லை. எம்மைப் பற்றிப் பேசுவதும் இல்லையே. எங்களைக் கிள்ளுக் கீரையாகத் தான் எண்ணுகிறார்கள். அப்படி என்ன கௌரவம் உங்களுக்கு?....?

பூனையாரே! ஏன் உனக்குப் பல கேள்விகள்? உன்னையும் என்னையும் ஒப்பிட்டுப் பார்க்கிறாயே. இந்துக் கடவுளரின் வடிவங்களில் எனது தலையுடன் கூடிய ஒரு கடவுளும் இருக்கிறார், இது தெரியாதா உனக்கு? இது தெரியாமல் இருந்துகொண்டு பல கேள்விகளைக் கேட்டு என் நேரத்தை வீணாக்காதே, ..போ.! போ! என்றது யானை.

பூனைக்குச் சிறு எரிச்சல் ஏற்படவே யானை மகாராஜாவே! ஒரு சந்தேகம்...? உங்களைப் பற்றி கவிஞர்கள் வர்ணிக்கும் போது, உங்கள் கால்கள் உரல்களைப் போல இருக்கிறதாம்; காதுகள் சுளகுகளைப்போல இருக்கிறதாம்; கண்களைப் பார்க்க குண்டுமணிகள் போல இருக்கிறதாம்; உங்கள் மூக்கைப் பார்த்தால் மனிதரின் பல்லாயிரம் கைகள் இணைந்த பலமுள்ள ஒரு கைபோல இருக்கிறதாம்; என்று என்னென்னவோ

வர்ணிக்கிறார்கள்,,விமர்சிக்கிறார்கள். ஏன் மகாராஜாவே! உங்கள் அங்கங்களை இப்படி வர்ணித்தால் என்ன? உங்கள் கால்கள் வெட்டிய பனங்குற்றிகள் போலவும், காதுகள் பெரிய திருக்கை மீன்போலவும்; கண்களை எனது கண்ணைப் போலவும்; உங்கள் மூக்கை எனது வால் போலவும் வர்ணித்து விமர்சிக்கலாமே..? என்று கூறவே யானைக்கு கோபம் வந்தது.

ஏ...அற்ப பிராணியே! நீ என்னை விமர்சிக்கிறாயா? உனக்கும் விமர்சனம் செய்யத் தெரியுமா? விமர்சனம் செய்வதற்கும் ஒரு தகுதி வேண்டும் பூனையாரே! கண்டதையெல்லாம் கண்டபடி, உன்மனம் விரும்பியபடி, விமர்சிப்பது, வர்ணிப்பது எல்லாம் விமர்சனங்கள் அல்ல. விமர்சனம் செய்யும் போது ஒன்றுக்கொன்று ஒத்துப் போகக்கூடியதாக, தொடர்புடையதாக, பயனுடையதாக, சிந்திக்க வைப்பதாக, திருந்திக் கொள்ளவைப்பதாக, யதார்த்தமுடையதாகத் தான் ஒருவரின் விமர்சனம் இருக்கவேண்டுமேயன்றி நீ கூறியது போல் வாய்க்கு வந்தபடி, விதண்டாவாதமாக, கற்பனைவாதமாகக் கதைப்பது, விமர்சனமாகா, எனச் சற்றுக் கோபத்துடன் கூறிய யானை பின் கோபந்தணிந்து, பூனையாரே! உன்னை நான் ஏசிவிட்டேன். மன்னித்துக் கொள்! உனது புத்தி இவ்வளவு தான் என நான் யோசிக்கச் சில நிமிடங்கள் சென்றுவிட்டன. அதனால் இப்படி நடந்துகொண்டேன். ஆனால் ஒன்று கூறுகிறேன், இதைக் கேட்டால் உன் மனம் திருப்பியடையும்.

நீயோ சின்னப் பிராணி. என்னை இப்படி விமர்சித்து அறியாமையால் விளக்கம் கேட்டாய். விமர்சித்தாய்! இதைவிடக் கேவலம் இத்தகைய தன்மையைப்போல மானிடர்களுக்குள்ளேயும் இருக்கிறார்களாம்; அவர்களை விட நீ பரவாயில்லை.

www.tamilarangam.net

மனதைச் சமாதானப்படுத்திக் கொள். பூனையாரே! இன்று நடந்தது உனக்கு இறுதி நிகழ்வாக இருக்கட்டும். இனிமேல் நீ எதையாவது, எவரையாவது விமர்சனம் செய்யப்போகும்போது, அதற்கான தகுதி உன்னிடம் இருக்கிறதா? என உன்னையே நீ கேட்டுக்கொண்டபின் , விமர்சிக்க எடுத்த கருத்துக்கள் சரியானவையா? என்பதையும் ஆராய்ந்தபின் விமர்சிக்கப் போ. இல்லையேல் உனது பலவீனத்தை நீயே அம்பலப்படுத்தி, அவதூறுக்குள்ளாவாய்! என யானை புத்தி புகட்டியது.

யானையின் புத்தியைக் கேட்ட பூனை தெளிவு பெற்று, யானைமகாராஜாவே! உங்கள் புத்திமதிகளைக் கேட்டுக் கொண்டிருந்த எனக்குப் பசியே போய்விட்டது. இப்போது தான் நான் பூரணமான பூனையாக இருக்கிறேன். முன்பு எனது இனத்தவரைக் கண்டபடி விமர்சித்து நான் வெறுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, புத்திகெட்டிருந்தேன். இப்போ திருந்திவிட்டேன். நன்றி ஐயா! என்று பூனை கூறவே, யானை மீண்டும் ஒருமுறை சந்திப்போம் எனக்கூறி விடைபெற்று, காட்டுப் பாதையில் நுழைந்தது.


கலை விளக்கு

சந்தா விபரம்:



தனிப்பிரதி - 1,50 டி.எம்.
1வருடச்சந்தா - 15, டி.எம்
(தபாற் செலவு உட்பட).

S.Packiyanathan.Stadtsparkasse Dortmund
Konto-Nr.632135726

www.tamilarangam.net

# சிறகுகள் வேண்டும்

அம்பலவன் புவனேந்திரன்.

ஆயிரம் எண்ணங்கள் ஆர்ப்பரிக்கும் - அவை
அனைத்துக்கும் மனமே முதலாகும்.
காரியம் ஆக முதல்வேண்டும் - இங்கே
கருணை காட்டும் துணைவேண்டும்.

போலியான மனிதரிங்கே - நல்ல
பொழுதைக் கழிப்பர் வீணாகவே
கேலிப் பேச்சுக்கும் அளவில்லை - முழுதாகக்
கேட்பவர்க்கும் மதியுமில்லை..

வாதம் செய்து வாழ்பவர்கள் - நல்
வாழ்வுக்கு வழியைக் காட்டவில்லை.
வேதமும் முழுதாய்த் தெரியவில்லை - அவன்
பாதமே முடிவென உணர்வாரில்லை,

உறவு கொள்ள மனிதரில்லை - இங்கே
உதவாக்கரைகள் நிறைந்திருக்க,
துறவுக்கு வழியும் தெரியவில்லை - இத்
துன்பத்தை மறந்து வாழ்வதற்கு

தலையில் நிறைந்த பாரம் -பெருந்
தடைகள் நிறைந்த பாலம்
உடையும் போது ஓடும் - இவன்
உள்ளம் முழுவதும் வெள்ளம்...

நினைத்தாலே வெறுக்கிறது வாழ்க்கை - இது
நிலையே இல்லாததினாலே...
அணைத்தால் நிம்மதியாகும் - மரணம்
அமைதியைத் தருகின்ற பயணம்.



# உங்களுக்குத் தெரியுமா?

யமுனா

நம்மில் பெரும்பாலோருக்கு கோப்பி சாப்பிடும் வழக்கம் பழக்கமாகி இருக்கிறது. அதிலும் சிலர் அடிக்கடி காப்பி அருந்துபவர்களாக இருக்கலாம். நாம் போகும் இடத்திலும் 'வாருங்கள் கோப்பி சாப்பிடுகிறீர்களா?' என்றே வரவேற்கிறார்கள். அந்தக் கோப்பி **பானத்தில் காஃபின் என்ற** நச்சுப் பொருள் உள்ளதை நம்மில் பலர் அறிந்திருந்தபோதிலும் கோப்பி சாப்பிடுவதை என்னவோ விடுவதாகக் காணோம். இரண்டொரு கோப்பைகள் கோப்பி அருந்துவதனால் நம் உடலில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து உடலியல் வல்லுநர்கள் தெரிவிப்பதைக் கேட்கும் போது வியப்புடன் அச்சமாகவும் இருக்கிறது.

www.tamilarangam.net

வயிற்றிலே சாதாரணமாக உள்ள வெப்பம்-காப்பி உள்ளே இறங்கியதும்-பத்து அல்லது பதினைந்து டிகிரி வரை அதிகரிக்கிறதாம். அத்துடன் உமிழ் நீரும் இரண்டு மடங்கு சுரக்கிறதாம். சிறுநீரகம் நூறு சதவிகிதம் அதிக மான சிறு நீரை உற்பத்தி செய்வதுடன், உடலில் வைறட் ரோகுளோரிக் அமிலம் நானூறு சதவிகிதம் அதிகமாக சுரக்கிறதாம்.

மற்றும் மூளையிலுள்ள ரத்தக் குழாய்கள் குறுகுகின்றன. இருதயத்தைச் சுற்றி அமைந்துள்ள ரத்தக்குழாய்கள் விரிவடைகின்றன. நுரையீலானது சாதாரண நிலையைவிட பதின்மூன்று சதவிகிதம் விரைந்து இயங்குகிறது. இருதயம் முன்பைவிட பதினைந்து சதவிகிதம் அதிகமாக வேகத்துடன் துடிக்கத் தொடங்குகிறது. உடலில் 'மெட்டபாலிஸம்' என்கிற பொருள், மாறுபடும் நிலை இருபத்தைந்து சதவிகிதம் அதிகமாகிறது.

இவைகள் மட்டுமின்றி, கோப்பி அதிகமாக அருந்துபவர்கள் நரம்புத்தளர்ச்சியால் பாதிக்கப்பட்டு சீக்கிரத்தில் உணர்ச்சி வசப்படும் தன்மையை உடையவர்களாக இருக்கிறார்கள் என்பதும் மருத்துவ ஆய்வுகளில் நிருபிக்கப்பட்டுள்ளது. இவ்வண்ணம் கோப்பி அருந்துவதால் நம் உடலுக்குள் ஏற்படும் வியப்பையும் அச்சத்தை யும் தரத்தக்க மாறுதல் களை அறிந்தும் எத்தனைபேர் கோப்பி சாப்பிடுவதை நிறுத்துவார்கள் என்பது ஐயமே !.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜேர்மனியில் தமிழ்மக்களின் நிலைப்பாடு.



எஸ். இராஜகருணா.

ஜேர்மனியில் தமிழ்மக்களின் நிலைப்பாடுகளைக் கருத்திற் கொள்ளும் போது பல்வேறு விடயங்கள், பலவித கோணங்களில் ஆராயப்பட வேண்டிய விடயம் என்பது தெளிவாகின்றது. இங்கு வாழும் மக்கள் தமிழருடன் எப்படிப் பழகுகின்றனர்? எவ்வாறு வரவேற்கின்றனர்? இந் நாட்டவர் முன்பு எப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்தார்கள்? என்பன முக்கியமான விடயங்களாகும். முதலாம் இரண்டாம் உலகப் போரின் போது இவர்கள் பல சேதங்களுக்குள்ளாகி, உயிர் உடைமைகளை இழந்து தவித்தவர்கள். அதுமட்டுமன்றி இவர்களே முதலில் அகதிகளாக கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, முதலிய நாடுகளில் தஞ்சம் அடைந்தனர். இதன் பின்னர் தான் எவராயினும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசியல் தஞ்சம் கொடுத்துக் காப்பாற்றினார்கள். அது மட்டுமல்ல அரசியல்தஞ்சத்திற்கான அரசியல் சட்டங்களையும் இயற்றினார்கள். பாதிக்கப்பட்டோருக்கு உயிர்ப் பாதுகாப்புக் கொடுக்க முன் வந்தனர். இலங்கையைப் பொறுத்த வரையில் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லீம்கள் ஆகிய மூவினத்தவரும் இங்கு அகதிகளாக வாழ்கின்றார்கள் என்பதையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

1958ல் சத்தியாக்கிரகத்தில் ஆரம்பித்து 1976 யாழ்க் கலவரத்தில், 1977ல் தனிநாட்டுக் கோரிக்கை, 1972



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1978ல் சுய உரிமைக் கோரிக்கையால்... எம்மினத்தவர் ஜேர்மனி மட்டுமன்றி பல்வேறு நாடுகளிலும் அரசியல் தஞ்சம் கோரினார்கள். இதில் பெரும்பாலானோர் வேலைவாய்ப்பைத் தேடியே இங்கு வந்தார்கள். 1983ல் நடைபெற்ற இனக்கலவரத்தால் பெரும்பாலான தமிழ்மக்கள் உடமைகளை இழந்து, காணிகளை விற்று, வட்டிக்குக் காசு எடுத்து எப்படியும் உயிரைக் காக்கவென்று உண்மையாகவே இந்நாட்டிற்குத் தஞ்சம் புகுந்தனர்.

ஜேர்மன் நாட்டுக் கலாச்சாரமும் நமது நாட்டுக் கலாச்சாரமும் இரு வேறுபட்ட கலாச்சாரங்களாகும். உடல்நிறம், உடை, மொழி, பண்பாடுகள் வேறுபாடுடையவை. சமயரீதியில், கூட்டிணைப்பு, உறவு ரீதியில் ஒன்றுபட்டுக் கூட்டுக்குடும்பமாக வாழ்பவர்கள் தமிழர்கள். இங்கு ஜேர்மனியர் எப்படி என்றாலும் தமது வசதிக்கு ஏற்ப வாழ்பவர்கள். இதனால் இவர்கள் நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் எம்மவர் கலாச்சாரம் அழிந்து விடுமோ என்ற அச்சம் தோன்றுகிறது. அத்துடன் சுகாதாரரீதியில் பார்க்கும் போது, சூடான காலநிலையில் வாழ்ந்த நாம் இந்நாட்டிற்கு வந்ததும் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகின்றோம். அம்மை, சளரோகம், கால் கை உளைவு, இருதய நோய்கள் ஏற்படுகின்றன. இவற்றால் பாதிக்கப்பட்டு விரக்தியுற்ற நிலையில் வாழ்கின்றனர். இயந்திரங்களுடன் வேலை செய்து அங்கவீனமுற்றோரும் இதற்குள் அடங்குகின்றனர்.

மற்றொரு முக்கியமான விடயம் ஜேர்மன் காரர்களின் உறவும் காலநிலையைப் போன்றது. அடிக்கடி மாறும் மனப்பாங்கு உடையவர்கள் எனலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்கள் வெளிநாட்டவர்களுடன் சுமுகமான உறவு வைத்துக் கொள்ள விரும்புவதில்லை. பலர் மக்களைச் சளித்துத் தம் வெறுப்பைக் காட்டிக் கொள்வர். எம்மினத்தவரைக் 'கறுப்பர்' என்று ஒதுக்கி வைப்பர். வேலைத்தலங்களிலும் நெருங்கிக் கதைக்க மாட்டார்கள். எல்லோரும் இப்படி அல்ல. நல்லவர்களும் இவர் இருக்கின்றனர். இவர்களின் வரலாற்றை உற்று நோக்கும் போது இரண்டாம் உலக யுத்தத்தில் இன்றுமொரு இனமான யூதர்களைக் கொன்று குவித்தவர்கள். கிட்டத்தட்ட ஐரோப்பா முழுவதும் 10 மில்லியன் யூதர்களைக் கொன்றனர். இரண்டாம் உலக யுத்தத்தின் பின் துருக்கியிலிருந்து ஆட்களை வரவழைத்து இந்நாட்டைக் கட்டியெழுப்பினர். ஆனால் இன்று துருக்கியர் உட்பட "அவுஸ்லாண்டர் நவுஸ்" கிட்லர் திரும்பி வருகின்றார் என்றும் கதைக்கின்றனர். அரசியற் கட்சியான REP வெளிநாட்டவரே வெளியேறு என்று கூறுகின்றது. ஆளும் கிறுனான் அரசியற் கட்சி, எஸ். பி. டி இவர்களுக்கு வாக்குரிமை கொடுக்கும்படியும், நல்லுறவை ஏற்படுத்த வேண்டும் என்றும் கோருகின்றது.

பொதுவாகத் தமிழராகிய எம்மவர் இங்கு சாதகத்தைக் காட்டிலும் பாதகமே கூடுதலாகக் காணப்படுகின்றன. இங்கு எமது வாழ்க்கை கேள்விக்குறியாகவே உள்ளது. இங்கு வந்த தமிழர்களில் 6% மானோர் அரசியற் தஞ்சம் அங்கீகரிக்கப்பட்ட அகதிகளாக வாழ்கின்றனர். இன்னும் பலர் "டுல்டுங்" விசாவுடன், நாட்டுப் பிரச்சினை தீர்ந்தால் எந்நேரமும் திருப்பி அனுப்பப்படலாம் என்ற சலிப்புப் பத்திரத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தின்படி தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இங்கே பத்துவருடம் முடிந்தவர்கள் என சில சலுகைகள் வழங்கப் பட்டுள்ளன. எல்லோருக்கும் ஒரு திடமான எதிர்காலம் உண்டா? என்பது கேள்விக்குறிதான். இதனால் இந்த நாட்டு மொழியை முழுமையாய்ப் படிக்க ஒருவரும் முயற்சி செய்வதில்லை. இம்மொழியைப் படித்து என்ன பயன்? என்ற எண்ணத்தில் இருப்பவர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர். இப்படி நிலைத்து நிலைத்து வாழ்ந்து ஐந்து வருடங்களையும், பத்து வருடங்களையும் தாண்டியோர் தொடர்ந்து வாழ்கின்றனர். இங்கு மொழிப்பிரச்சினை எம்மவர்க்குப் பெரும் பிரச்சினையாக உள்ளது. எங்கு சென்றாலும் மொழி பெயர்ப்பாளர்களைத் துணைக்கு இழுத்துச் செல்ல வேண்டிய நிலைமை உருவாகின்றது. தனித்துச் செயற்பட முடியாத நிலையால் பலருக்கு வெறுமையான வாழ்வு வாழும் உணர்வுகள் தோன்றுகின்றன. இந்நாட்டு மொழியால் பின்னாக இங்கே என்ன பயன்? என்று ஆங்கிலத்தைத் தேடி கனடா மோகத்தால் கவரப்பட்டவர்களும், கவரப்பட்டுக் கொண்டிருப்பவர்களும் வாழ்கின்றனர்.

ஒரு இனம் இன்னொரு நாட்டு இனத்துடன், அல்லது அரசியற் தஞ்சம் புகுந்து வாழ வேண்டுமானால் இனம், மொழி, மதம், மனப்பாங்கு, கலாச்சாரம் என்பவற்றுள் ஏதாவது ஒன்றில் ஒற்றுமை இருக்க வேண்டும். ஒரு நல்லுறவு இல்லாவிடின் வெறுப்புணர்ச்சி ஏற்பட்டுப் பிரச்சினைகளுக்குத் தூண்டுகோலாக அமையும். எம்மைப் பொறுத்தவரையிலும் மேற்கூறிய நிலை தான் உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நம் நாட்டிலிருந்து வெளியேறி போனவர்களில்
1982—1985 வரையில் 75% மாணவர் கல்வி கற்றவர்களா
வர். அவர்களுடன் தொடர்ந்து பின் வந்தவர்களும் ஓரளவு
கற்றவர்களே. இவர்கள் இங்கு வந்து நம் கல்விக்குச் சம்பந்
தப்படாத தொழில்களில் அக்கறை காட்டவேண்டியிருந்தது.
மேலும் இங்கு உயர்கல்வி கற்க முடியாமைக்கும், இடையில்
படிப்பை விட்டு வந்த மாணவர்கள் தொடர்ந்து படிக்கமுடி
யாத சூழ்நிலையும் ஏற்பட்டதற்குக் காரணம் இங்குள்ள சட்ட
திட்டங்களே. மாநிலங்களுக்கு மாநிலங்கள் சட்டங்க
ளில் வேறுபட்டுள்ளன. அத்துடன் நகரங்கள், கிராமங்கள்
தனித்துச் சுதந்திரமாக வைக்கக் கூடிய சட்டங்களும்
இருக்கின்றன. ஒரு சில நகரங்கள் படிப்பதற்கு வசதி செய்து
கொடுத்துள்ளன. சில மாநிலங்களில் அகதிகளாக ஏற்றுக்
கொள்ளப்பட்டவர்களுக்கு மட்டும் கல்வி கற்கும் வாய்ப்பைக்
கொடுத்துள்ளன. இவர்களிற் சிலர் இன்று கல்வி கற்க வசதி
இருந்தும் படிக்கமுடியாதுள்ளனர். நம் நாட்டில் நிலவும் சீதனக்
கொடுமையால் படிப்பதைவிட, சகோதரிகளுக்கு வாழ்வளிப்
பதே மேல் என நினைத்து, ஏதோ ஒரு வேலை கிடைத்தால்
போதும் என்று வாழ்கின்றனர். இன்னும் சிலர் சந்தர்ப்பம்
இருந்தும் அதனைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர். இதனால்
நம் இனத்தவருக்கே கெட்ட பெயர் வாங்கிக் கொடுக்கின்
றனர் எனலாம். 'ஒரு பானைக்கு ஒரு சோறு பதம்' என்பது
போல், ஒரு தமிழன் தவறு செய்யும் போது அது மற்றவர்களை
யும் பாதிப்புள்ளாக்குகின்றது.

இன்று உலகிலேயே வல்லரசு நாடுகளா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவும், விஞ்ஞானத்துறையில் முன்னணியில் நிற்கும் நாடாகவும் ஜேர்மனி விளங்குகின்றது. இந்த நாட்டில் கிடைத்த சந்தர்ப் பங்களைப் பயன்படுத்தத் தெரியாதவர்கள் யார் இருக்கின்ற னர். இந்த நாட்டில் பெறமுடியாத கல்வி, தொழில், வேறு எந்த நாட்டிலும் பெறமுடியாது என்பது திட்டவட்டமான உண் மையாகும். (இலங்கை) இந்த நாட்டை, தொழில் நுட்பத்தில் இன் னேறிய நாடாகும். எமது மக்களின் ஆங்கில மோகத்தால் கனடா, லண்டன், என்று புறப்பட்டு அகப்பட்டவர்களும் 7,000 DM க்கு மேலாக பணத்தை இழந்து, இரண்டு தோணி யில் கால் வைத்த நிலை போல் வாழ்ந்து கொண்டிருக்கின்ற னர்.

எமது வருங்கால சந்ததியினருக்கு ஒரு இருண்ட நிலைதான் இங்கு தோற்றமளிக்கின்றது. சில பிள்ளைகளுக்குத் தாய்மொழியை எழுத வாசிக்கத் தெரியாது. நாம் எம் நாட்டுக்குத் திரும்பிப் போகும் நிலையிலே எமது தாய் நாடு இரண்டாவது தாய் நாடாகப் பிள்ளைகளுக்குத் தோன்றும். அங்கு பலவற்றில் மொழிப் பிரச்சினையால், வேறு பல காரணங்களால் பிள்ளைகளுக்குத் திண் டாட்டம் ஏற்படலாம். அடுத்து இளைஞர்கள் இங்கு ஏதாவது ஒரு தொழில்களையக் கற்றால் எமது நாட்டுக்குப் போய் அங்கு பயன்படுத்தினால் நம் நாடு அபிவிருத்தியடை யும்: எம் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

எமது தாய் மொழியைப் பிள்ளைகளுக்குப் புகட்ட இங்கு வெவ்வேறு நகரங்களிலும், தமிழ் பாடசாலைகள், நூல்நிலையங் கள் என்பன ஆரம்பிக்கப்பட வேண்டும். இந்த இடங்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சிறுவர் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. தமிழ் நூல் நிலையங்களும் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ளன எனலாம்.

ஜேர்மன் நாட்டுச் சட்டப்படி தற்போது இங்கு வருவோருக்கு ஐந்து வருடங்கள் சென்ற பின்னரே வேலை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றது. 1987க்கு முன்னர் இங்கு வந்து இரண்டு வருடங்களின் பின்னர் அவர்களுக்கு வேலை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. இக்காரணத்தால் அண்மையில் வந்தவர்கள் சுவிற்சலாந்துக்கு, உழைப்பை நாடிச் செல்கின்றனர். பெருவாரக்கூட்டத்தின் " அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை " என்பது போல் நிரந்தரமற்ற, ஒரு திடமான கொள்கையற்ற வாழ்க்கையையே எம்மினத்தவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நாம் வந்த நோக்கம், பொருளாதாரம், உயிர்ப்பாதுகாப்பு எனப்படுத்தப்பட்டவையாக இருக்கலாம். ஆனால் இங்கும் உயிர்பாதுகாப்பு உண்டா? என்பதும் இவ் இடங்களைப் பொறுத்து, சூழ்நிலையைப் பொறுத்து அமைந்துள்ளது. அகில உலக நாடும் அகதிகள் என எல்லா நாட்டு மக்களும் தஞ்சம் பெற்று 'அகதி முகாமில்' ஒன்றாக வாழும்பொழுது, பல இன மக்களுடன் கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டு சச்சரவுகள் ஏற்படுகின்றன. உதாரணமாக பேர்லின், சில்டோர்வ், நூரன்பேர்க், போன்ற இடங்களில் பிரச்சினைகள் உயிருக்கு ஆபத்தையும் ஏற்படுத்தக் கூடியதாக இருந்தன. அகதி முகாமில் சுதந்திரமற்று, மனைவி, பிள்ளைகளைப் பிரிந்த நிலையில் விரக்தியுற்றும் பலர் வாழ்கின்றனர். இன்றும் இவர் குடிவகைகளுக்கு அடிமையாகி ஊரத் திரிகின்றனர், நோயாளியாகின்றனர். வாழ்க்கையில் விரக்தியுற்று பற்றற்ற நிலையில் வாழ்கின்றனர்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெற்ற தாயும் பிறந்த நாடும், மதமும் எம்முடன் ஒன்றிவிட்டவை. இவற்றைப் பாதுகாப்பது ஒவ்வொரு தமிழனின் கடமையாகும். இங்கு பெரும்பாலானோர் தம் சமயத்தையே இங்கும் இறுக்கமாகப் பின்பற்றி வாழ்கின்றனர். மேலும் பலர் சைவ சமயத்தை விட்டு கிறிஸ்தவ சமயத்திற்கு மாறியுள்ளனர். இப்படி ஜேர்மனியர் மாறுவார்களா? என்பது கேள்விக்குறி. இவர் உண்மையான நம்பிக்கையில், அதனால் கிடைக்கப் பெற்றவராகவும் மாறுகின்றனர் எனக் கூறுவதையும் கேட்கக்கூடியதாயுள்ளது. இவர் இங்கு நடக்கும் இந்துக்கோவில் என்ற அடையாளத்தின் பெயரில் மாறுகின்றனர். எமது மதப்படி "எம்மதமும் சம்மதம்" இதை கிறிஸ்தவர்களாக மாறுபவர்கள் சைவசமயத்தைப் பற்றி தவறான முறையில் கூற முனைகின்றனர். இவர்களுக்கு சைவசமயத்தைப் பற்றி பூரணமாகத் தெரியாது. ஒரு மதத்தினர் இன்னொரு மதத்தினரை எள்ளி நகையாடக் கூடாது. எனது தேவைக்காக மதம் மாறினேன் என்று கூறுவதை விடுத்து எந்த மதத்தைச் சாடக் கூடாது. எமது சமய பிரச்சாரம் இவ்வாறே பரவுகின்றது.

பொதுவாகக் கூறின் இந்நாட்டில் நன்மையான பல அனுகூலங்கள் இருந்த போதும் அவை எமக்குப் பூரண பயன் அளிப்பதில்லை. நாம் கட்டாயம் தாயகம் திரும்புவோம், எனவே இங்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி முன்னேறுவதும், நமது கல்வி, ஞானங்களைப் பெறுவதும், எம் நாட்டை வளம் படுத்தச் சிந்திப்பதும், தமிழர்களாகிய எமது கடமையாகும்.

www.tamilarangam.net

64 பக்க.... தொடர்

பெறுமதியற்ற கடவுச்சீட்டு, விசா வைத்திருப்போர் உடன் நாடு கடத்தப்படுவர்.

குற்றவாளிகளும் அவ்வாறு அனுப்பப்படுவர்.

சொந்தநாட்டின் கடவுச்சீட்டுக்களை வைத்திராதவர்களை விசேட அடையாள அட்டைகளுடன் நாடுகடத்தப் புதிய சட்டம் இடமளிக்கிறது.

<u>நிரந்தர வதிவிட அனுமதி மறுப்புக்கான காரணங்கள்</u>.

1. வருவாய் இல்லாதிருந்தால்
2. வீடு இல்லாதிருந்தால்
3. சமூகநல உதவி பெற்றிருந்தால்
4. 18 மாதங்கள் வேலைப்படி (ஆர்பைட்லொஸ் பணம்) பெற்றிருந்தால், அதன்பின் வேலை செய்வதாயின் 'வேலை ஒப்பந்தம்' காட்டாதவிடின் நிரந்தர விசா மறுக்கப்பட்டு, நாடு கடத்தமுடியும். இச்சட்டம் அமுலுக்கு அடுத்த ஓரிரு மாதங்களில் வருவது உறுதியெனத் தெரிகிறது. அதேவேளை நிரந்தர கட்டுப்பாடற்ற வதிவிடவிசா இல்லாத சகலரும் புதியசட்டத்தில் கீழ் கொண்டுவரப்படுவர்.

எனவேதான் எமது நிலை, இந்நாட்டில் எதிர்காலம் என்பது மிகவும் இக்கட்டான கட்டத்தைத் தாண்ட வேண்டிய ஒன்றாக உள்ளது. முன் எப்போதையும் விட மிகவும் விழிப்புடன் செயற்படுமாறு பேர்லின் வாழ் தமிழ்மக்களை அறிவுறுத்தவே இதனைத் தொகுத்து இங்கு வெளியிடுகின்றோம்.

ஈ.த.ந.கழகம், த.பெ.எண். 370151, 1/37.



நன்றி -- ஜதார்த்தம்
பேர்லின். 1

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கவித்தாய்

கவியவன் மனதிலே குடியிருக்கும் கருத்துக்களைப்
புவியோர் தம் சிந்தனையாக்கிட பலவழிகள் தனையே,
பவித்திரமாய் தெரிவிப்பான் பாக்களிலே பல்விதமாய்
அவிவிவேகமென அங்கே இலக்கியச்சுவை ததும்பும்.

தானெடுத்த பொருளொடு அழகையும் இனிமையையும்
ஒன்றிக் குழைத்து, வர்ணனையாற் சாந்திட்டு - தான்
எண்ணிட்ட கவிக்கருவை மேலும் கவினுறச் செய்ய,
தன்மனக் கண்ணாற் காணும் கற்பனை நீராற் கழுவிடுவான்.

தானுணர்ந்த தன்மையதைப் பிறருணர்வாக்கிவிட
பன்னரிய கவியுக்திகளுடன் தானுமுறவாடி- என்றும்
மன்னுபுகழ் காப்பியங்கள், கவிகளென மழலைகள்
ஈனும் உன்னதக் கவித்தாய் அவன், கவிஞன் கண்டீர்!

- கவிவாணி -




Kalaivilakku
S.Packiyanathan
Droote.13
4600 Dortmund 14



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புகழ்



வள்ளுவர் கூறும் புகழை எவ்விதம் ~~பெற~~ பெறவேண்டும்? புகழின் தன்மை என்ன? சிலர், புகழை விலை கொடுத்து வாங்கப்படுவதும் உண்டு. ஆனால் வள்ளுவர் காலத்துப் புகழ் அவ்வாறு உள்ளதல்ல. தமது உயர்ந்த பண்பாட்டால் ~~டால்~~ பெறுவதையே புகழ் என்று போற்றுகிறார். இந்த உயரிய பண்பாட்டை வளர்த்துச் சிறப்படைய வேண்டும்.

விளம்பரத்தால் வரும் புகழ் நிலைத்து நிற்பதில்லை. வெகு விரைவில் அழிந்துவிடும். நல்ல எண்ணத்தையும் நல்ல செயல்களையும் நாளும் வளர்த்துக் கொள்ளுவதன் மூலம் புகழ் பெறவேண்டும். இந்தப் புகழ்தான் புகழாக நின்று நிலைக்கும். எல்லாராலும் போற்றப்படும்,

புகழ்பட வாழ முடியாதவர்கள் தம்மைத் தாமே நொந்துகொள்ள வேண்டும். ஏனெனில் தம்மிடமுள்ள நலமில்லாப் பண்புகள், இவ்வாறு புகழ் பெற முடியாமல் தம்மைச் செய்துவிட்டனவே என்று. எனவே, தம்முடைய பண்பாடுகளை வளர்க்க முயல வேண்டும்; சிறப்பாக்க எண்ண வேண்டும்.

உயர்ந்த தனிச்சிறப்புக்களால்தான் புகழ் பெற முடியுமே தவிர, ஆடம்பரத்தால் புகழைச் சேர்த்துவிட முடியாது.

புகழ்படவாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன்.

தம்மை இகழ்பவர்களை நொந்து என்ன பயன்? பண்புடன் புகழுடன் வாழாவிட்டால் இகழத்தான் செய்வார்கள். இதில் சந்தேகமென்ன?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மேற்கு ஜேர்மனியில் டோர்மூண்ட் நகரில் தமிழ் மணம்

உரிமைப் போராட்டங்களினால் தமிழர்களின் வாழ்வு கடந்த பத்து வருடங்களாகப் பாதிக்கப்பட்டது. போரின் விளைவினால் பெருந்தொகையான தமிழர்கள் மாண்டனர்; பலர் பாதிக்கப்பட்டனர்; பலர் நாட்டை விட்டே அகதிகளாக ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்தனர். இவ்வாறானவர்களில் ஜேர்மனி வந்து சேர்ந்தவர்களில் கிட்டத்தட்ட 20,000 தமிழர்கள் அடங்குவர். ஜேர்மனிய அரசாங்கத்தின் சட்டதிட்டங்கள் இவர்களை ஒடுக்கியபோதும் தற்காலிகமான பாதுகாப்புக்கொடுத்தது என்று தான் சொல்ல வேண்டும். தஞ்சமென்று வந்தவர்களுக்கு தங்குவசதி, உணவு, உடை கொடுத்து ஆதரித்தனர் என்பதையும் மறுக்க முடியாது.

இங்கு குடியேறிய தமிழ் மக்களில் சிலர் வேலை அனுமதிப்பத்திரம் பெற்று வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். சிலர் வேலையற்று சமூக உதவிப்பணத்தில் வாழ்க்கையைச் செலுத்துகிறார்கள். இவ்வேளையில் தமிழர்கள் தங்கள் மொழி, கலை, கலாசாரம், பண்பாடு என்பவற்றை வேரூன்றச் செய்யும் வகையில் நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டு கலைநிகழ்ச்சிகளை நடத்தி தமிழ் மணத்தைப் பரப்பி வருகிறார்கள். குறிப்பாக ஜேர்மனியிலுள்ள பிரதான நகர்களில் ஒன்றான டோர்மூண்ட் (Dortmund) நகரைச் சற்று நோக்கின், ஓரளவு தமிழ் மணத்தை முகர்ந்து மதிப்பிட முடியும். டோர்மூண்ட் வாழ் தமிழ் மக்களின் நல்ல சிந்தனையினாலும், பெருமுயற்சியினாலும் தமிழ் மணம் இளந்தென்றல் என வீசுகிறது எனலாம். ஜேர்மனியின் பிற இடங்களை விட இங்கு தமிழ்க் கலாசார அம்சங்கள் பெருமளவு இடம்பெறுகின்றன எனலாம்.

**ஆ. பாக்கியநாதன்**

இந்த வகையில் டோர்மூண்ட்டில் நிகழ்கின்ற தமிழர் முயற்சிகள் மேலைநாடுகளில் தமிழ் வளர்த்த பெருமையைப் பெறுகின்றன எனலாம். இக்காலத்தில் நம் நடைமுறை அரசியல் விவகாரங்களைப் பிரதிபலிக்கும் வகையில் காலச் சூழ்நிலைக்கு ஏற்ப தமிழ்ச் சஞ்சிகைகளும் தோன்றியுள்ளன. இவை தமிழையும், தமிழ்க் கலாசாரத்தையும் முடிந்தவரை வளர்த்து வருகின்றன. வளர்க்க முனைகின்றன எனலாம். இவ்விடத்தில் நாம் பெருமைப்பட வேண்டும். இங்குள்ள தமிழ் மக்களின் அயராமுயற்சியாலும், ஒத்துழைப்பாலும் இங்கு ஒரு இந்துக்கோவில் நிறுவப்பட்டு ஏறக்குறைய ஐந்து வருடங்களாகிவிட்டன. தவறாது உரிய காலங்களில் இங்கு பூசைகள், விசேடபூசைகள், சிறப்பாக நடைபெறுகின்றன.

தமிழ்ப்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி, நன்மை கருதி தமிழ்ப் பாடசாலைகள் ஐந்து வருடங்களுக்கு முன்னரேயே ஆரம்பிக்கப்பட்டன. பின்பு சிலரின் ஒருங்கிணைந்த முயற்சியினால் ''கரிதாஸ் நிறுவனத்தின்'' கீழ் இப்போது இயங்கிவருகின்றது. பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற ஆசிரிய ஆசிரியைகள் அங்கு கல்வி போதிக்கின்றார்கள். அங்கீகரிக்கப்பட்ட ஜேர்மன் பாடசாலையொன்றில் (Volkshochschule) வாரத்தில் மூன்று நாட்கள் வகுப்புகள் நடைபெறுகின்றன.

விக்கினேஸ்வரா நடன கலா மன்றம், வாணி நர்த்தனாலயம் என்ற இரு நடன மன்றங்கள் இங்கு சிறப்புற இயங்கி வருகின்றன. இம் மன்றங்கள் இங்கும் வேறு நகரங்களிலும் நடன நிகழ்ச்சிகளை அளித்து வருகின்றன. இவ்விரு மன்றங்களும் மேடையேற்றுகின்றன, என்பது பெருமைக்குரிய விடயமே.

கடந்த வருடம் தமிழர் ஒன்றியம் உதயமாகிச் செயலில் இறங்கியது. சென்ற 15.4.89 இல் கலைவிழாவைச் சிறப்பாக நடாத்தியது. அடுத்து தமிழ் நூல் நிலையம் ஒன்றை இவ்வொன்றியம் திறந்து வைத்தது.

1986 ஆம் ஆண்டு மார்கழி மாதம் கலை விளக்கு எனும் சஞ்சிகை தோற்றம் பெற்று இன்றுவரை சிறப்பாக இயங்கி, தமிழ்த்தொண்டாற்றி வருகிறது; கல்வி, கலை, கலாசாரங்களை அடிப்படையாகக் கொண்டு வெளிவருகிறது. மேலும் இந் நகரத்திலிருந்து சிறுகதை, கவிதைத்தொகுப்பு, கட்டுரை நூல்கள் வெளியாகியுள்ளன. இவற்றை விட முக்கிய அம்சமாக சிறுவர்களின் நன்மை கருதி சிறுவர்களஞ்சியம் எனும் காலாண்டு சஞ்சிகையும் வெளிவந்து கொண்டிருக்கிறது.

இசைத்துறையை நோக்கும் போது சிறப்புற இசை வளர்கின்றது என்றும் மிகையாகாது. இங்கு ''ஏழிசை வித்தியாலயம்'' என்ற இசைப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பொதுப்பட்ட கல்வி முறைமையை உருவாக்கும் பொருட்டு செயற்படுகின்றது. பல நகரங்களிலும் உள்ள ஆசிரியர்கள் இந்நகரில் ஒன்றுகூடி ஒருங்கிணைந்த பாடத்திட்டத்தை உருவாக்கி, தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு ஆவன செய்ய முனைந்துள்ளனர்.

இதர முக்கிய அம்சங்களாக ஆண்டு தோறும் சரஸ்வதி பூசை நடைபெறுகின்றது. விளையாட்டுப் போட்டி நடைபெறுகின்றது. இங்குள்ள அகதிகளின் நிலைப்பாடுகள் கரிதாஸ் நிறுவனம் மூலம் முன்வைக்கப்படுகின்றன. தாய் நாட்டில் இருப்பது போல் இங்கேயும் தமிழ் சினிமாப் படங்களை இங்குள்ள தியேட்டர் ஒன்றில் பார்த்து நம் மக்கள் மகிழக் கூடியதாயுள்ளது.

தமிழர்களின் நலனுக்காக ஒத்துழைப்பு நல்கும் மனப்பான்மையுடன் இங்குள்ள ''கரிதாஸ் நிறுவனம்'' உதவி செய்வதில் அக்கறையாயுள்ளது. இதற்கு இந்நிறுவனப் பொறுப்பதிகாரி திருமதி எம். கார்மன் அவர்களே காரணகர்த்தா ஆவார். இவருடைய சேவையை இங்கு வாழ் தமிழ் மக்கள் மறக்க முடியாது.

டோர்மூண்டில் மேற்கூறிய தமிழர்தம் செயல்நடவடிக்கைகள் தவிர இன்னும் எமக்குத் தெரியாமல் வேறு சிலவும் இருக்கலாம். எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாக நோக்கும் போது இந்நகரில் தமிழ்மணம் பரப்பும் நடவடிக்கைகளை எண்ணி நாம் புளகாங்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


**BOBBY JUNGBLUT**
KFZ-MEISTERBETRIEB

## உங்கள் வாகனத்தேவைகளுக்கு

## நாடவேண்டிய நம்பிக்கையான நிறுவனம்

**BOBBY JUNGBLUT**

- விபத்துக்குள்ளான வாகனங்களுக்கு எதுவித சிரமமும் மின்றி இன்சூரன்ஸ் பெற்றுக்கொடுக்கப்படும்.
- விபத்துக்குள்ளான வாகனம் நவீன முறைப்படி புதிய வாகனத்தரத்தில் புதுப்பித்துக்கொடுக்கப்படும்.
- வாகனம் வாங்க விற்க நம்பிக்கையான நிறுவனம். தவணைமுறையிலும் வாகனம் வாங்குவதற்குரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

சட்டப்படி பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.

**ALTESTR. 77**
**4600 DORTMUND 1**

**T.P. 0231 - 5600312**
**TELEFAX 0231 - 515831**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கணம் கற்போம்

திருமதி. வி. பாக்கியநாதன். B.A

உவமைத்தொடர்கள்

வசனநடையிலும் செய்யுள் நடையிலும் பேச்சுவழக்கிலும் பலவகையான உவமைத் தொடர்கள் இடம் பெறுகின்றன. கேட்பதற்கும் வாசிப்பதற்கும் இனிமையொடு சுவையையும் அளித்து, கருத்துக்களை ஆணித்தரமாக வலியுறுத்திக் கூறுவதற்கு உவமைகள் பெரிதும் உதவுகின்றன. நன்கு தெரிந்த ~~யாத~~ ஒரு பொருளின் இயல்பை விளக்கி, தெரியாத ஒரு பொருளின் இயல்பை விளக்குவதே உவமையின் நோக்கம் எனலாம். உவமைகள் பெரும்பாலும் "போல" என்ற உவமை உருபுகள் பெற்று வாக்கியங்களில், உரையாடல்களில் இடம் பெறுகின்றன.

உதாரணமாகச் சில உவமைத்தொடர்களை நோக்குவோம்.

* அடியற்ற மரம் போல (அத்திவாரமற்ற நிலை)
* அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல (பொறுமையை விளக்குவது)
* இலவு காத்த கிளிபோல (காத்திருந்து ஏமாற்றமடைதல்)
* கல்லிலே நார் உரிக்கிறது போல (இயலாத காரியத்தைச் செய்ய முயல்வது)
* உள்ளங்கை நெல்லிக்கனி போல (மிகத் தெளிவாகப் புலப்படுதல்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலக்கணத் தொடர்

சொற்கள் தமக்குரிய நேர்ப்பொருளை உணர்த்தாமல் ஆற்றலினால், குறிப்பான ஒரு பொருளை உணர்த்தி வழங்கிவரும் போது, அத்தகைய தொடர்மொழி இலக்கணத் தொடர் எனப்படும். இலக்கணப் பொருளை அதாவது குறிப்புப் பொருளை உணர்த்தி வருதலினால் இப்பெயர் பெற்றது. வழி வழியாகக் குறிப்புப்பொருளில் வழங்கி வருவதால் இதனை மரபுத்தொடர் என்றும் கூறுவதுண்டு.

கருத்தை அழுத்தமாகவும் சுருக்கமாகவும், சுவையாகவும் கூறுவதற்கு இத்தகைய இலக்கணத் தொடர்கள் பெரிதும் உதவுகின்றன. உதாரணமாகச் சில;

மனப்பால் குடித்தல் – (கை கூடாதவற்றை எண்ணி மகிழ்தல்)

அறைகூவுதல் – போருக்கு அழைத்தல்
துண்டுவிழுதல் – நட்டமாதல்
பூசிமெழுகுதல் – குற்றத்தை மீறத்தல்
கருவறுத்தல் – முற்றாக அழித்தல்
கண்கலத்தல் – ஒருவரையொருவர் பார்த்தல்
பிஞ்சிற் பழுத்தல் – இளமையில் முதிர்வடைதல்

இவ்வாறு பலவகைப்பட்ட தொடர்கள் பல்வேறு பொருளில் வழங்குகின்றன. இவை முறையே அடி, கண், கழுத்து, காது, கால், கை, செவி, தலை, வயிறு, வாய், வால், தோள், நாக்கு, பல், முகம், பற்றியனவாயும் ஏனைய இலக்கணங்கள் பற்றியனவாயும் வரும் இயல்புடையன. இவற்றை மேலும் விளங்கக்கூடிய வகையில் ஒவ்வொன்றுக்கும் உதாரணத்தைத் தெரிந்திருத்தல் நன்று.

அடி – அடியிடுதல் .... தொடங்குதல்
கண் – கண்மூடுதல் ..... இறத்தல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கழுத்து - கழுத்தறுத்தல் ( தீமைசெய்தல் )
காது - காதுகுத்தல் - ( வஞ்சித்தல் )
கால் - கால்கொள்ளுதல் (விழா முதலியவற்றைத் தொடக்குதல்)
கை - கைப்பிடித்தல் (மணம் புரிதல் )
செவி - செவிப்படுத்துதல் (காதில் மெல்ல அறிவித்தல்)
தலை - தலைகாட்டுதல் ( நிறைவேற்றுதல் )
வயிறு - வயிற்றைக்கலக்குதல் (பெருந்திகிலடைதல்)
வாய் - வாயில் மண்போடுதல் (கேடு விளைத்தல் )
தோள் - தோள்மாறுதல் (மனம் வேறுபடுதல் )
நாக்கு - நாக்கு நீட்டுதல் (அடக்கமின்றிப் பேசுதல்)
பல் - பல்லைப்பிடுங்குதல் (சக்தியை வாங்குதல் )
முகம் - முகத்திலடித்தல் (நேரே நிந்தித்தல்)
வால் - வால் நறுக்குதல் ( செருக்கடைதல் )

இவற்றுக்கு முன் உதாரணமாகக் கூறப்பட்ட சில தொடர்கள் ஏனைய இலக்கணங்கள் பற்றி வந்தனவாகும். இவை வினைவடிவில் அமைந்த தொடர்கள். பெயர்வடிவில் அமைந்த தொடர்கள் பின்வருமாறு;-

கிள்ளுக் கீரை - மிக எளிமையான பொருள்
அவசரக்குடுக்கை - பதற்றமான ஆள்
ஆசாடபூபதி - ஏமாற்றுக்காரன்
ஏட்டுச்சுரைக்காய் - நடைமுறையிற் பயன்படாத கல்வி
இந்திரசாலம் - ஏமாற்றும் தன்மை
உதவாக்கரை - பயனற்றபொருள்

எனப் பலவாம்.



42ம் பக்கம் பார்க்க....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பறக்கும் தட்டு

TONY

## Unidentified flying Objects

இன்றைய நூற்றாண்டில் விஞ்ஞானம் எத்தனையோ ஆற்றல்கள், விநோதங்களைச் செய்யும் இவ்வேளையில் மனிதனுக்குச் சவாலாக அமைகின்றது இந்தப் பறக்கும் தட்டுக்கள். இவை எங்கிருந்து வருகின்றன? ஏன் வருகின்றன? எம்மை விட அவற்றில் வருபவர்கள் மேலுள்ளவர்களா? என்ற கேள்விகளுக்கு எமது விஞ்ஞானிகள் தம் சிந்தனையை, மூளையைச் சுழல விடுகின்றனர். 1950ம், 1960ம் ஆண்டுகளில் விஞ்ஞானிகள் நினைத்தது போலல்லாமல் ஏற்கனவே நடாத்தப்பட்ட "GEMINI SURVEYER APPOLO (மனிதன் நிலாத்தரையில் அடி பதித்தமை) முதல் தற்போது (நீலக்கிரகம்) "VIKING 2" வரை ஆய்வுகளின்படி எமது சூரிய மண்டலத்திலுள்ள ஒன்பது கிரகங்களிலிருந்து இந்தப் "பறக்குந் தட்டு மனிதர்கள்" வருவதற்கான சாத்தியங்கள் புலப்படவில்லை. ஆகவே அண்ட வெளியிலுள்ள மற்றும் ஏதாவது சூரியக்குடும்பங்களான "GALAXY" எனக் கூறப்படும் கிரகமண்டலங்களிலிருந்துதான் இவர்கள் வந்திருக்க வேண்டும். அதை நிரூபிக்கும் வண்ணம் சுமார் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் ஏவப்பட்ட "VIKING 2" (ஏற்கனவே கதிர்விளக்கு இதழ்களிற் பிரசுரமானவை) சூரிய மண்டலத்தை விட்டு விலகி அண்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியினுள் பிரவேசிக்கும் வேளையில் அங்குள்ள மனிதர்களுக்கு எம்மைப் பற்றிய தகவல்களை இவ்வுலகின் 55 மொழிகளில் தாங்கிய வண்ணம் பறந்து கொண்டிருக்கின்றது.

பூமியிலிருந்து மனிதன் மேற்கொண்ட விஞ்ஞான ஆராய்ச்சிகளால் ஏவப்பட்ட ஏவுகணைகள் (ROCKETS) செய்தித் தொடர்புக் கோள்கள் (SATELLITES) விண் வெளி ஆய்வுகூடங்கள் (RESEARCH STATIONS) விண்வெளி வீரர்களால் கைவிடப்பட்ட, மற்றும் வெடித்துச் சிதறிய உதிரிப்பாகங்கள், நட்சத்திரக் கற்கள், இப்படி கோடானுகோடி பொருட்கள் அண்ட வெளியில் ஏதோ சுற்றிய வண்ணம் இருக்கின்றன. இவைகள் ஏதாவது பூமியை நோக்கி வருமானால் வளிமண்டலத்தினுள் பிரவேசிக்கும் போதே எரிந்து விடும். ஆனால் இப்பறக்குந்தட்டுகள் அப்படியன்றி மிக ஜாக்கிரதையாக அமைதியாக பூமிக்கு வந்து கொண்டிருக்கின்றன என்பதை நோக்கும்போது அவைகள் ஓர் அற்புதசக்தி படைத்த உயிர்களால் இயக்கப்பட வேண்டும்.

இம் மனிதர்களை நேரிற் கண்ட எம்மவர் பறக்குந்தட்டுக்களின் வடிவங்கள், இவர்களின் அங்க அடையாளங்கள் ஆகியவற்றை வெவ்வேறு விதமாக விபரித்துள்ளனர். சிலர் அம்மனிதர்கள் மூன்று அடி உயரமானவர்கள் எனவும், வேறு சிலர் நான்கு அடி உயரம் உடையவர்கள் என்றும் கூறுகின்றனர். கடந்த வருடம் இறுதிப் பகுதியில் சோவியத் ரஷ்யாவில் இறங்கிய பறக்கும் தட்டு மனிதனை மிக அண்மையிற்

www.tamilarangam.net

பார்த்த ஒருவர், அந்த உருவம் ஒரு மனிதக் குரங்கை வட
பாரியதாகவும், மூன்று கண்கள் உடையதாகவும் உள்
ளது என வர்ணித்துள்ளார். வித்தியாசமான இவ்வடை
யாளங்களின் மேலும் இம்மனிதர்கள் வெவ்வேறு அயற்
கிரகங்களிலிருந்து வருபவர்களாக இருக்க வேண்டும்.
ஒரே கிரகமான பூமியின் ஐந்து கண்டங்களில் உள்ள
நாமே வித்தியாசமான நிற, உருவ வேறுபாடுகளுடன்
இருக்கும் போது பல்லாயிரக்கணக்கான மைல் தூரத்
திலிருந்து வரும் இம்மனிதர்கள் அப்படித் தோற்றமளிக்
கலாம் என ஏற்றுக் கொள்வதில் தவறில்லை.

பறக்கும் தட்டுக்களைப் பற்றி எமது
விஞ்ஞானிகள் முதலில் அவ்வளவு கவனம் எடுக்க
வில்லை. சீதோஷ்ண நிலை மாற்றங்களால் இவ்வேளை
ஆகாயத்தில் பாரிய வெளிச்சங்கள் தோன்றுவதுண்டு.
அந்தத் தோற்றங்களைப் பார்த்த மனிதர் சிலர், தமது
கற்பனை நயத்தையும் சேர்த்து வதந்திகளைப் பரப்புவ
தாகவும், சில பத்திரிகைகள் தம்மைப் பிரசித்தி படுத்து
வதற்காகவும், அப்படிப் பறக்கும் தட்டுப் புரளிகளை
ஏற்படுத்துவதாகவும் கருதப்பட்டது. இதே வேளை பண
பலம், படைப்பலம் பெற்ற வல்லரசுகள் பறக்கும் தட்டு
களின் வடிவில் போர் புரிவதற்கான விமானங்களைத்
தயாரித்தமைக்கான சான்றுகளுமுண்டு. இரண்டாம் உலக
மகாயுத்தத்தில் அதி திறமையான ஜேர்மன் விஞ்ஞானி
கள் நுட்பம் மிகுந்த பாரிய தட்டுக்களை உருவாக்கி
க்கொண்டு எதிரிகளை அழிக்கும் திட்டங்கள் இருந்த

www.tamilarangam.net

தாகவும், அதற்கு ஆதாரமாக 1978ம் ஆண்டு ஓர் "BLUE PRINT" இரகசிய வரைபடம் வைபி பற்றப்பட்டது. இதில் எந்தவொரு விமானத்திலும் இல்லாதபடி மிக நுட்பமாக காந்தத் தன்னியக்க, அதிவேக சுழற்சி இயந்திரம் "ELECTRO MAGNETIC TURBINES' கதிரியக்க படத்திரை "LACER RADAR' விமானி இல்லாமலேயே யாத்திரையையும் பறக்க வைக்க முடியும். அதன் இயந்திர அமைப்புக்கள் எல்லாம் வியப்புக்குரியன. ஆனால் இவை எல்லாவற்றையும் மீறி வெளியுலகில் இருந்துதான் ஏதோ ஒன்று பூமியை அடைந்து திரும்புகின்றன என நிரூபிக்கும் வண்ணம் திடமான பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. இதன் பின்பே எவராவது உலகின் எப்பகுதியிலாவது, இப் பறக்கும் தட்டுக்கள் பற்றிய தடயங்களை, அல்லது நேரில் பார்த்ததாகவோ தெரிவிப்பதற்கும், அவைகளைப் பற்றி மேற் கொண்டு ஆராய்ச்சி செய்வதற்குமான ஓர் அமைப்பு U.F.O என்ற பெயரில் அமெரிக்காவிலுள்ள டெக்ஸாஸ் மாநிலத்தில் அமைக்கப்பட்டது.

தொடரும்....
(அடுத்த இதழில்)


பாழ்பட்ட மனம் பாலைவனத்துக்குச் சமமாகும். பாலைவனத்திலே பயிரேது, மலர் எது? பாழ்பட்ட மனத்திலே சிந்தனைக்கு இடமேது. உரிமை உணர்ச்சி எது? எதுவும் முடியாது.

— அண்ணா

www.tamilarangam.net

# அவள் அறிந்துகொண்டது.

திருமதி. கோசல்யா சொர்ணலிங்கம்.



மரங் காய்த்து விட்டது
கனிந்து விட்டது,
அறிந்து கொண்டது...
கல் எறி படுவதால்!

சரம் தொட்டதும்
துளைகள் பட்டதும்
பதம் வந்து விட்டது....
பலன் புலனானதே!

அரம் பட்டது
அறுவை கொண்டது
புதிய கலங்களால்
ரணங்கள் காயுமே!

கரம் பட்டது
கன்றிப் போனாலும்
கதிர் வீச்சதன்
கன்றல் போக்குமே!

உரம் கொண்டது
மரம் சாய்ந்திடா
கனம் காத்திடும்
மன விழுதுகள்!

தரம் உள்ளது
தகுதி பெற்றது
தலைகள் உருண்டன.
நிலைகள் மாறிடா,

உரமிட்டதும்
உலை வைத்தது
கலை வார்த்ததும்
உறுதியாய் நிலைக்கவே!

பேரம் பேசியும்
தூரம் தொலைத்திடா
தாரகம் அதன்
பரிமாணமே..!

www.tamilarangam.net

அடுக்குமொழித் தொடர்

இணைமொழித் தொடரிலும் சற்று நீண்டனவாக இத்தொடர்கள் அமைந்துள்ளன. இலக்கியங்களிலும் மேடைப் பேச்சிலும் நயம் கருதி இச்சொற்றொடர்கள் பயின்று வருகின்றன. இணைமொழித் தொடர்களாவன ....அறமும் மறமும், ஆதியந்தம், இடக்குமுடக்கு, ஈடும் எடுப்பும், உருவுந்திருவும், ஊர் உறக்கம், எதிரும் புதிருமாய், ஏற்றத்தாழ்வு, ஒட்டியுலர்ந்து, ஓட்டமும் நடையுமாய், என்று உயிர் எழுத்துக்களை முதலாகக் கொண்டும், உயிர்மெய் எழுத்துக்களில் பலவற்றை முதலாகக் கொண்டும் வழங்கிவருகின்றன. இவை ஓசை நயம் பொருந்தி நேரடிப்பொருளை உணர்த்தவல்லன. இணைமொழித் தொடருக்கும் அடுக்குமொழித் தொடருக்கும் அதிக வேறுபாடுகள் இல்லை. அடுக்குமொழித் தொடர் சொற்றொடர்கள் பல தொடர்ந்து வந்து பொருளை உணர்த்திநின்று சொல்லும் பொருளின் தன்மைக்கு அழகு கொடுத்து கருத்தை விளங்க வைக்கின்றன.

உதாரணம் –அமிழ்திலுமினிய தமிழ்மொழி.

உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரை.

ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்கும்..

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும்...

ஊருக்கும் பேருக்கும் தாரை வார்த்து..

எழுமையுந் தொடரும் உழுவலன்பு...

போன்ற சில சொற்றொடர்களை உதாரணமாகக் கூறலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனிதன் மதுவுக்கு அடிமையாவதேன்?



மார்க்கண்டு. பேர்லின்

மனிதர்கள் போதைப் பொருட்களை உபயோகிப்பதற்குரிய விளக்கம் யாது? போதைப் பொருட்கள் எனக் கூறும் போது, மிகவும் சாதாரணமான வொட்கா, வைன், பியர், ஹசிஷ், அபின், புகையிலை, ஆகியவையும், அதிகம் கூடிய எதர், ஈதர், திராவகம், மோர்பியா, மற்றும் மயக்கத்தைக் கொடுக்கின்ற கிளாரான்களையும் குறிப்பிடலாம். இவற்றைப் பாவிக்கும் பழக்கம் ஏன் ஆரம்பித்தது. இப்பழக்கம் நாள்தோறும் விரைவாகப் பரவி வருவதன் காரணம் என்ன? மதுபானங்களாகிய வொட்கா, வைன், பியர் என்பன விற்கப்பட்ட இடங்களில் எவ்வாறு அபின், ஹசிஷ், போதைக்காளான், பாவனைக்குட்படுத்தப்படுகின்றன? மேற்கூறியவைகள் கிடைக்கக்கூடிய எல்லாவிடங்களிலும் புகையிலைப் பொருட்களை ஏன் மக்கள் நுகர்கின்றனர்? மனிதர்கள் ஏன் போதைவயமாகின்றனர்? வைன் குடிக்கும் ஒரு நபரைப் பார்த்து, ஏன் வைன் குடிக்கின்றீர்கள் எனக் கேட்டால், "எல்லோரும் குடிப்பது போல் குடிக்கின்றேன், எனக்கு உற்சாகத்தைத் தருகின்றது" என்பார்; வைன் குடிப்பதனால் ஏற்படும் பாதிப்புக்களை உணராதவர் "வைன்" குடிப்பதால் தேக ஆரோக்கியத்தைப் பெறுகின்றேன்" என்று கூறுவார். இத்தகைய பதில்களை மிக நீண்ட காலத்திற்கு முன்னரே ஆதாரமற்ற போலியானவைக

www.tamilarangam.net

ளாக நிருபிக்கப்பட்டன.

புகைபிடிப்பவரை நோக்கி, ஏன் புகைக்கின்றீர்கள் என்று வினவிய போது, "எண்ணிறந்தோர் புகைக்கின்றனர்; நானும் நேரத்தைக் கழிப்பதற்குப் பாவிக்கின்றேன்," என்றார். "நேரத்தைப் போக்கவும், சந்தோஷமடையவும், எல்லோரும் பாவிக்கின்றனர்," என்ற கூற்றுக்களை ஆராயவோமாயின் இவை மன்னிக்கத் தகாதவை என்றும் கூறலாம். இவர்கள் இயற்கைச் செல்வத்தை வீணடிக்கின்றனர். மனித உழைப்பினால் உண்டாக்கப்பட்ட பொருட்களை வீணாக்கின்றனர். தமக்கு மட்டுமன்றி மற்றவர்களுக்கும் கெடுதிவிளைக்கும் பழக்கங்களைக் கையாளுகின்றனர். புகையிலையையும் வைனையும், அபினையும், கஞ்சாவையும் தயாரித்துப் பாவனையாளருக்கு விநியோகம் செய்வதற்கு, கோடிக்கணக்கான மனிதர்களின் உழைப்புத் தேவைப்படுகின்றது. பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் முந்திரிகைக் கொடிகளுக்கும் கஞ்சாச் செடிகளுக்கும், அபின் செடிக்கும், புகையிலைக்கும், போதைப் பொருட்களை உற்பத்தி செய்வோர் பயிரிட ஆரம்பிக்கின்றனர். உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு வீணிற மற்று வேண்டப்படும் பிரதேசங்களில் நகர்வோருக்கும், சிற்றுப்புற வாசிகளுக்கும் தீங்கிழைக்கும் வைன், கஞ்சா, அபின், புகையிலை, விஸ்கி ஆகிய போதைப் பொருட்களை மிகுந்த பணச் செலவில் உற்பத்தி செய்கின்றார்கள். இவை எல்லாவற்றுக்கும் அடிப்படைக் காரணமாக "நுகர்வோரின் வெறும் பொழுது போக்கலையும், - "மனம் உற்சாகமடைதலையும், - மற்றவர்கள் பாவிக்கின்றனர்" என்ற பதில்களே இருக்கின்றன. கெடுதியான மதுவர்க்கங்களுக்கும், போதைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருட்களும் கொன்று குவித்த பாவனையாளர்களின் எண்ணிக்கை. இயற்கையழிவுகள், நோய்களால் இறந்த மக்களின் எண்ணிக்கையை விட அதிகமானதாகும்.

எல்லாவிடங்களிலும், எப்பொழுதும் தம் பிள்ளைகளை நேசித்துத், தம்மை அர்ப்பணிக்கும் மக்களைக் காண்கின்றோம். ஆனால் இவர்களுள் அநேகர் மதுக்கடையிலும், போதைகளிலும் அதிக பணத்தைச் செலவழித்து, தம் பிள்ளைகள் விரும்பியவற்றைக் கொடுக்க முடியாதிருக்கின்றனர். இவர்கள் தம் பிள்ளைகளை நேசிக்காமல் போதைப் பொருட்களை நேசிப்பதற்குக் காரணங்கள் பல இருக்கலாம்.

ஒரு மனிதன் தன் வாழ்க்கையை உற்று அவதானித்துச் சிந்திக்கும் போது தனக்குள்ளே இரு பிராணிகள் இருப்பதை அவனால் அறிந்து கொள்ள முடிகின்றது. அவற்றுள் ஒரு பிராணி முரட்டுத்தன்மை உடையதாகவும், தாழ்வான மிருகத்தன்மையும், அறிவும் உடையதாகவும் காட்சியளிக்கின்றது. மற்றைய பிராணியானது திட்பார்வையுடன் ஆத்மீகத் தன்மை உள்ளதாக விளங்குகின்றது. முரட்டுப் பிராணிகள் செய்யும் தொழில்களாவன; உண்ணுதல், குடித்தல், ஆறுதலடைதல், சயனித்தல், பாற்தொடர்பு, அசைவு, என்பனவாம். சுருங்கக் கூறின் இக்கண்ணில்லாப் பிராணி காற்றிலாடும் பட்டம் போன்றது. இரண்டாவது பிராணியாகிய கண்ணுடைய, ஆத்மீக புருஷன், செதுக்கப்பட்ட விலங்குகளுடன் இணைக்கப்பட்டு இருப்பதனால் கண்ணில்லாப் பிராணி செய்யும் குறை நிறைகளைக் கண்டு கொள்கின்றன. இரண்டாவதாக இருக்கும் ஆத்மப் பிராணி தம் தொழிற்பாடுகளை வெளிக்காட்டும் போது, அதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனச்சாட்சி என்று அழைக்கின்றோம். பிழையான பாதையிலிருந்து சரியான பாதையை நாங்கள் நோக்கிப் போகும் போது மனச்சாட்சியை உற்றுக்கவனிப்பதில்லை. இதைத் தெளிவாகக் கூறின் ஒரு மனிதப்பிராணியினுடைய வாழ்க்கை இரு செயற்பாடுகளைக் கொண்டது எனலாம். 1. தன்னுடைய செயற்பாடுகளை மனிதன் மனச்சாட்சியுடன் சமாதானமாக வாழ முயலுதல்,
2. மனச்சாட்சியின் ஏவல்களை அறிந்தும் மனிதன் ஒடி, ஒளிந்து, விலங்குப் பிராணியின் திசையை ஏற்றுக் கொள்ளல்.

அநேகமாக தமது மனச்சாட்சியைத் திணறடித்து, அதனிடமிருந்து விடைபெற வேண்டுமென விரும்புபவர்கள் ஒழுக்கமாண்மை அறிந்தோரும், விவேகமும் அறிவும் பெற்ற மாந்தர்கள் அவர்.

மனச்சாட்சியை முன்னொதுக்கி, அதனுடைய கட்டளைகளுக்குச் செவிசாய்க்காமல், போதைப் பொருட்களைப் பாவித்து, தங்களுடைய மூளைக்கு நஞ்சு பாய்ச்சுவார்கள். வைன், வொட்கா, பியர், கஷிஷ் சினைல் - கஞ்சா போதையைத் தரும் மைபிரியாக்காளான் போன்ற போதை வஸ்துக்கள் இவர்களுடைய கையில் பிரயோசனத்தை அடைகின்றன.

மனச்சாட்சியின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒருவரால் இயலாத போதிலும், தனது வாழ்க்கையை மனச்சாட்சியின் வேண்டுதலுக்கிணங்க திருத்தியமைக்க அவனிடம் சக்தியும் விருப்பமும் இல்லாத நிலை உருவாகும். மதுவும், அபின் கஞ்சா, சினைல் என்பனவும் மனச்சாட்சியைக் கொல்வதற்கு உடன்படுகின்றன.

ஆங்கிலமூலம் - லியோ டால்ஸ்டாய் 1890

தொடரும்.. (அடுத்த இதழில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# நாரையும் நிலாவும்

இரவு நேரம். நாரையொன்று காற்றில் பறந்து சென்று கொண்டிருந்தது. எங்கும் பட்டப்பகல் போல் ஒளி பரவியிருந்தது. அந்த ஒளியில் வெப்பம் இல்லை. குளிர்ச்சி நிறைந்த அந்த இன்ப ஒளி எங்கிருந்து வருகிறது என்று தேடித்தான் அந்த நாரை பறந்து கொண்டிருந்தது.

உலகமெங்கும் அந்த இன்ப ஒளி பரவியிருந்தது. நாரை சென்ற இடமெல்லாம் அந்த ஒளி நிறைந்திருந்தது. நாரை சிந்தனையோடு வானை நோக்கி நிமிர்ந்தது.

உயரத்தில் ஒளித்தகடு போல் வட்ட நிலா அழகுடன் விளங்கியது. நாரை அதன் அழகில் மயங்கி நிலாவையே பார்த்துக் கொண்டு நின்றது.

நிலா அழகாகத்தான் இருந்தது. உலக முழுவதும் ஒளி பரப்பும் பேரொளியைப் பெற்றுத்தான் விளங்கியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் அந்த ஒளி நிலாவின் இடையிலே ஓர் இருட்டுப் பகுதியும் இருந்தது. அது நிலவின் இடையில் ஒரு கறைபோல இருந்தது.

இவ்வளவு அழகான நிலவின் இடையில் இப்படி ஒரு கறையிருக்கிறதே என்று வருந்தியது நாரை. தன்னிடம் உள்ள கறையை நீக்கிக் கொள்ளாமல் உலகைச் சூழ்ந்துள்ள இருளை ஓட்டப் புறப்பட்டு விட்டதே இந்த நிலவு ! இதன் கருத்து என்ன என்று அறிய நாரை ஆசைப்பட்டது.

அது நிலாவை நோக்கிப் பறந்தது. எவ்வளவு உயரம் பறந்தும் அதனால் நிலாவை அடைய முடியவில்லை; போகப்போக நிலா மேலும் மேலும் தொலைவில்தான் இருந்துகொண்டிருந்தது.

நிலாவை நெருங்க முடியாது என்று கண்டு கொண்ட நாரை, அருகில் தவழ்ந்து சென்று கொண்டிருந்த ஒரு மேகத்தைப் பார்த்தது. "மேகமே, நிலா தன்னிடமுள்ள கறையைப் போக்கிக்கொள்ளாமல், உலகில் உள்ள இருளைப் போக்குகிறதே! இதன் கருத்து என்ன?" என்று கேட்டது.

"நாரையே, உயர்ந்த பெரியோர்கள் தங்கள் குறையைக் காட்டிலும் பிறருடைய குறையை நீக்குவதே முதற்கடமை என்று நினைப்பார்கள். அது போன்றதுதான் நிலாவின்இயல்பு!" என்றது மேகம். நிலாவின் உயர்ந்த தன்மையை வியந்து பாராட்டிக் கொண்டே நாரை உலகு நோக்கி இறங்கி வந்தது.

---

'கலைவிளக்கு' பங்குனி—சித்திரை இதழ் வெளிவரவில்லை. அதற்காக வாசகர்களிடம் மன்னிப்பு கோருகின்றோம்.

— ஆசிரியன் —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அதிசயிக்க வைத்த அருங்காட்சி



- நகுலா -

கடந்த 20.4.90 அன்று டோற்மூண்ட் கரிதாஸ் நிறுவனத்தில் நடைபெற்ற சித்திர சிற்பக் கண்காட்சி எல்லோரையும் பிரமிக்கவைத்து மகிழச் செய்தது. ஆரம்ப தினத்தன்று சித்திர சிற்பக்கண்காட்சியை திருமதி. எம். கார் மன் (டோற்மூண்ட் கரிதாஸ் நிறுவனம்) அவர்கள் நமது சம்பிரதாயமுறைப்படி குத்துவிளக்கேற்றித் திறந்து வைத்தார்.

திருமதி. எம். கார்மன் அவர்கள் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் சித்திர, சிற்பக் கலைஞர் திரு. சு. சிவகுமாரன் (கண்ணா) அவர் களின் திறமையைப் பாராட்டியும், வரைந்த ஓவியங்களின் தன்மையைப் புகழ்ந்தும், இப்படியான காட்சி நடைபெறுவ தையிட்டுத் தாம் மகிழ்வடைவதாகவும் குறிப்பிட்டார். இவரைத் தொடர்ந்து பேசிய கலைஞர். கண்ணா அவர்கள், தாம் கற்ற கல்விக்கு இங்கு என்ன செய்தோம்? என்ற கேள்வியே இந்த சித்திர, சிற்பக்கண்காட்சி உருவாக்கத்துக்கு காரணம் எனக் கூறினார். இதன் பின்னர் திரு. க. சிவதாஸன், திரு. பொ. ஸ்ரீஜீவகன், திரு. சு. பாக்கியநாதன் ஆகியோர் சிறப்புரை வழங்கினர்.

'புதியவடிவங்கள்' எனும் பெயரைத் தாங்கிய சித் திர சிற்பக்கண்காட்சிச் சிறப்புமலர் ஒன்று அழகியவண்ணத் தோற்றத்துடன் வெளியீடு செய்யப்பட்டது. இம் மலரை திரு. வி. எஸ். செல்வராஜா அவர்கள் வெளியீடு செய்துவைத்தார். ஆரம்ப நாளன்று பார்வையாளர்கள் அனைவருக்கும் தேநீர் விருந்து வைக்கப்பட்டது. செல்வி. ஜனனி சிவகுமாரனின் நன்றி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யுரையுடன் ஆரம்பவிழா இனிதே நிறைவுபெற்றது.

சித்திர சிற்பக்கண்காட்சி தொடர்ந்து ஒரு வாரம் வரை நடைபெற்று, பல இடங்களிலிருந்தும் மக்கள் வந்து இக் கண்காட்சியைக் கண்டு இரசித்து கலைஞரைப் பாராட்டிச் சென்றனர்.

அந்நிய நாடொன்றில், ஈழத்தமிழினத்தின் கைத்திறமையைத் தவழவிட்டு, நாம் பார்க்க வாய்ப்பளித்த கலைஞர். கண்ணா அவர்கள் எல்லோர் சிந்தையிலும் இடம் பிடித்துள்ளார் என்பது மாறாத உண்மையாகும்.

---



## போட்டி முடிவுகள்

கலைவிளக்கின் மூன்றாவது நிறைவையொட்டி நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் பலர் பங்கு கொண்டமையையிட்டு நாம் மகிழ்வடைகின்றோம். இப் போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் எமது நன்றி.

கட்டுரைப் போட்டியில் முதல் மூன்று கட்டுரைகள் பரிசுக்குரியனவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முதலாவது இடத்தைப் பெற்றுள்ள கட்டுரை இவ்விதழில் வெளியாகின்றது. இக்கட்டுரையை எழுதியவர் :

திரு. எஸ். இராஜகருணா
5880 ஊா டின்சைட்

இரண்டாவது இடம் -,

திரு. வி. நாகலிங்கம்
3538 மார்ஸ்பேக் .9

மூன்றாவது இடம் -


திருமதி. கா. புண்ணியமூர்த்தி
5300 பொன்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கொழும்பிலிருந்து ஜேர்மனி வரை.

இரா. சிவரஞ்சன்

சொர்க்கத்திலே திருமணங்கள் நிச்சயிக்கப்படுகின்றன. அது உண்மை தான் என்பது எல்லோருக்குமே தெரிந்த விடயம். ஆனால் இன்று வெளிநாடுகளில் தான் அவை நிச்சயம் செய்யப்படுகின்றன, என்பது நான் சொல்லவில்லை. உலகமே அறிந்த உண்மையாகிவிட்டது. திருமணம் என்ற பசப்பு வார்த்தைகளினால் பெண்கள் வெளிநாட்டுக்கு அனுப்பப்படுகின்றனர். மாப்பிள்ளையின் உருவம்

www.tamilarangam.net

முகம் எப்படியிருக்கும் என்று
கூடத் தெரியாத அந்தப் பெண்
கள் பொய்யான வாழ்க்கையை
வாழ்ந்து கொண்டிருப்பதை
வெளிநாடு வந்தபின்பே காண
க்கூடியதாயுள்ளது.

இன்றைய கேட்ட
மாக இருக்கும் நம்மினப் பெண்
கள் துன்பத்தை அநுபவிக்கி
றார்கள். இவர் வெளிப்பகட்
டுக்காக வெளிநாடு வருவதும்,
வந்த பின்பு தொடரும் துன்பங்
களைச் சகித்துக் கொள்ள முடி
யாத நிலையில் "நான் யாழ்ப்பா
ணமோ, எனது ஊருக்கோ,
போகப் போகின்றேன் என்று
திரும்பியவர்களும் உள்ளனர்.
மாப்பிள்ளையைப் பெற்றோர்கள்
தெரிவு செய்து, கிடைக்கும் நில
புலன்களை விற்றுப் பணம்
கிடைத்ததும் பெண்களை வெளி
நாட்டுக்கு அனுப்புவது, பின்னர்
புலம்புவது, என்னாம் சாதார
ண நிலையை நோக்கிச் செல்கின்
றன, இங்கே வந்ததும் பெண்க
ளுக்கு மாப்பிள்ளையைத் தெரி

யாதுமும் அவஸ்தைகள்
தொந்தமோ? அவர்கள் வேத
னைகள், மனக்குமுறல்கள் எப்
படி இருக்கும்.

காணல் நீர் வாழ்க்
கை போல் வாழும் வெளிநாட்
டுச் சூழ்நிலையிலே, "கொழும்
பிலிருந்து நோர்வேமானி" வந்த
அமலா என்ற பெண்ணின்
உண்மையான சம்பவமே
இக்கதையின் இடம் பெறுகின்
றது.

யாழ்ப்பாணத்துக்கு வடக்
கேயுள்ள கிராமம் தான் அம
லாவின் பெற்றோரின் பாரம்பரியப்
பிறப்பிடம். அங்கு அமலா
க.பொ.த சாதாரணப் பரீட்
சையை முடித்துவிட்டு பெற்றோ
ருடன் வாழ்ந்து வந்தாள். இந்
நிலையில் அவளுக்கு திருமணத்
தைச் செய்துவைக்க வேண்டும் என
முடிவெடுத்தனர் அமலாவின்
பெற்றோர். அவளுக்கு வயது
பதினைந்து. உலக அநுபவமி
கள் ஒன்றும் அறியாப் பருவத்தை
காணில் காதல் கூட அவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளிடம் இல்லை. அவளுக்குத் திருமணத்தில் விருப்பம் இல்லை. பணத்தை மதித்த அவளது பெற்றோர் மாப்பிள்ளை அசோயா ந வெளிநாட்டில் சம்பாதிக்கின்றான் என்று கேள்விப்பட்டு, ஏதேதோ வழியில் மகளின் மனத்தை மாற்றி வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு மகளைக் கொடுக்க முடிவெடுத்தனர். உடனே திருமண ஏற்பாடும், சீதன விசயப் பேரம் ஆரம்பமாகியது. சாதி மதம் பிரச்சினையில்லை. பெண்ணைப் பெற்றவர்கள் சீதனம் அதிகமாகக் கொடுக்க வேண்டிய தேவை இருக்கவில்லை. மாப்பிள்ளை பணம் நிறையச் சம்பாதிக்கிறானே. சீதனம் கொடுத்தாலும் அதுவும் தமது பெண்ணுக்குத் தானே என்ற நப்பாசையும் கூட இருந்தது. அமலாவுக்குத் திருமணம் பேசி நிச்சயம் செய்யப்பட்டது. ஆனால் திருமணம் தாய் நாட்டில் நடைபெற வாய்ப்பில்லை. அது மட்டுமல்ல தாய் நாட்டைப் பிரிந்து ஐந்து வருடங்களுக்கு மேலாகின்றன மாப்பிள்ளைக்கு. இதனால் தாய் நாட்டிற்கு வர மாப்பிள்ளைக்கு இஷ்டமில்லை. சொகுசான வாழ்வை மேற்கொண்ட சூழ்நிலையில் எப்படி மாப்பிள்ளைக்கு சொந்த ஊர் மண்ணின் வாசனை தெரியும். அதை மறந்து போனார்.

பெற்றோர்கள் அமலாவை ஜேர்மனிக்கு அனுப்ப முடிவு செய்தனர். அமலாவிற்கோ வெளிநாட்டுக்குப் போகவோ, திருமணம் செய்யவோ சிறி கூட விருப்பமேயில்லை. மகளை எப்படியும் வற்புறுத்தி வெளிநாட்டிற்கு அனுப்பிவிட்டால் தமக்குச் சுமை நீங்கி விடும், பொறுப்பு இல்லை, என்று எண்ணிய அமலாவின் பெற்றோர்கள், அமலாவுக்குப் புத்திமதிகள் சொல்லி நிலைமைகளைப் புரிய வைத்து வற்புறுத்தினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிநாட்டிற்குப் போகவேண்டிய ஆயத்தங்கள் எல்லாம் திட்டப்படியாக நடந்தன. கொழும்பு விமானநிலையத்தில் பெற்றோரிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு விமானத்தில் ஏறுவதற்காகச் சென்றாள். விமானத்தைப் பார்த்த அமலாவுக்கு அந்த விமானம் யமனின் எருமை வாகனம் போற் காட்சியளித்தது. அவளின் பிரயாணம் விக்கணைவ மாப்பிள்ளை நிரேஷ்க்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

கொழும்பிலிருந்து புறப்பட்ட விமானம் பாங்கொக் "BANGKOK" என்ற இடத்தில் தரித்தது. அமலா அங்கிருந்த ஹோட்டல் ஒன்றிலே இருமாதங்கள் இருந்தாள். அவளுக்குத் துணையாக ஆறு பெண்களும் வந்திருந்தனர். ஆனால் அவர்களில் சில ஆண்களே சகோதரர்கள் போல பழகி உதவி செய்து பாதுகாப்பளித்தனர்.

அமலா ஆண்டவனை வேண்டியபடி அமலா இருமாதங்களுக் கடத்திவிட்டாள். "பாங்கொக்"கிலிருந்து நிரேஷ்க்கு தொலைபேசியில் அமலா கதைத்து, பிரயாணி பொட்டுக்கு தமது விமானம் வரும் காலத்தையும் நேரத்தையும் அறிவித்தாள். முன் பின் அறிமுகம் இல்லாத மாப்பிள்ளை நிரேஷ் குறிப்பிட்ட நேரத்தில் அவ் விமானநிலையத்தில் நிற்பதாக உறுதியளித்தான்.

அமலாவுக்குக் கணவனைத் தெரியாது. தொலைபேசியில் பேசிய தொடர்பு மட்டும் தான் தெரியும். அவருடைய படம் மட்டுமே அவளிடம் இருந்தது. அதுவும் மாப்பிள்ளையின் பெற்றோர் கொடுத்திருந்த படம். அவர் பாடசாலையில் படிக்கும் போது எடுக்கப்பட்ட படம். எப்படி அவரை அடையாளம் கண்டு பிடிப்பேன் என்பது அவளது உளப் போராட்டமாகவும், பயமா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுகம் இருந்தது. இருபதாம் திகதி மாலை 3:45 நிமிடத்துக்கு வருவதாக அமலா சொல்லியிருந்தாள். பத்தொன்பதாம் திகதி இரவு நடந்த ஒரு விருந்தில் நிறையக் குடித்துவிட்டு மேசையில் படுத்துக்கிடந்த நரேஷ், அந்த நாள் 12 மணியாகியும் எழும்பவில்லை. அவ்வளவு குடி போதையில் இருந்தான். எனவே தான் போகமுடியாத நிலையில் பாஸ்கர் என்ற தனது நண்பரை விமான நிலையத்திற்கு அனுப்பி வைத்தான். பாஸ்கரும் நண்பனுக்கு உதவி செய்வதாகக் கூறி பிராங்போட் விமான நிலையத்திற்கு சரியாக 2.20 நிமிடத்தில் அங்கே நின்றார். அமலாவைச் சுமந்து வந்த விமானம் இறங்கிய நேரத்துக்கு வந்து சேர்ந்தது.

நண்பர் பாஸ்கரிடம் அமலாவின் படம் ஒன்றை நரேஷ் கொடுத்து, அமலாவை அடையாளம் கண்டு கூட்டி வரும்படி கூறியிருந்தான். பாஸ்கர் அமலாவை எல்லா இடமும் தேடினான். எப்படியோ அமலாவைக் கண்டு பிடித்து, நேரே அமலாவை நோக்கிச் சென்று நீங்கள் தான் Miss. அமலா வா? என்று கேட்க, அமலாவும் தனக்குப் பேசிய மாப்பிள்ளை இவராகத் தான் இருப்பார் என உணர்ந்து, அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள். அவளுக்கு இரு மாதங்களாக ஏற்பட்ட பயமும் விரக்தியுமே அவனைக் கண்டதும் பெரிய ஆபத்தினின்றும் விடுபட்ட ஆனந்தம் போல், அவனது அணைப்பில் சுகமும் கண்டாள். இப்போது இவரிடம் வந்து சேர்ந்து விட்டோமே என்ற திருப்தி அமலாவுக்கு. அது மட்டுமல்ல பாஸ்கர் எடுப்பான தோற்றம் கொண்டவன். கண்ணுக்குப் போட்டிருந்த கண்ணாடி, நாய்ச் சங்கிலியைப் போன்ற மொத்தமான தங்கச் சங்கிலி, மோதிரம், பச்சை நிற ஔடி கார் மொத்தத்தில் ஒரு பண முதலையின் தோற்றம்.....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாருக்குத் தான் அவளைப் பார்த்தால் ஆசை வராது. அவளும் ஒரு பெண் தானே.

பாஸ்கரும் இது தான் தருணம் என்று நினைத்துத் தனது அறைக்கு அமலாவைக் கூட்டிச் சென்றான். அன்றிரவு தனது ஆசைதீர அமலாவுடன் சிற்றின்பத்தை அடைந்தான். அவளும் தன்னை மணக்கப் போகும் கணவன் தானே என்று நம்பி தன்னையே அந்த வஞ்சகனிடம் ஒப்படைத்தாள். போதை தெளிந்த நிரேஷ், மறு நாள் காரியாலய நண்பர் பாஸ்கருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டான். அப்பொழுது நண்பனின் துரோகச் செயலை எண்ணி நிரேஷ் கவலைப்படவேயில்லை. காரணம் வெளிநாட்டில் தினமும் போதையில் வாழ்பவன் தானே இந்த நிரேஷ். சீதனத்தையும், பெற்ற தாய் தந்தையரையும் ஏமாற்றி வாழ்பவன் தான் இந்த நிரேஷ். இவருக்குமா ஒரு கல்யாணமா? அவருக்கு கூட்டாளி மட்டுமல்ல, தொழிலில் பங்காளியும் பாஸ்கர். நிரேஷ் காணும் மகிழ்ந்து மாப்பிள்ளை என இடம் கொடுத்தாள் அமலா. விதையை மறந்த பின், சந்தேகம் அடைந்த விமலா ஒன்றும் செய்யப் புரியாது, விமானத்தில் கை கொடுத்து உதவிய வசீலை கணவனுக்கு வரித்துக் கொண்டாள். வேறு என்ன செய்ய முடியும்?

அமலா தான் அறியவில்லை சோதனைகளையும் வேதனைகளையும் எண்ணி பெருமூச்சைச் சிந்தி, மனம் நொந்து கண்ணீர் வடித்தாள்.

வாழ்க்கைக் கப்பலிலே நொந்த உள்ளத்துடன் இருந்து கொண்டிருந்த அமலாவுக்கு எப்பொழுதும் முள்மேல் நடப்பது போலிருந்தது. பாஸ்கரும் நிரேஷுக்குச் சளைத்தவனல்ல என்று கூறும் அளவுக்கு கெட்டப்பழக்கம் உடையவன். தினமும் காசியல் ஆடிப் புவான். அமலா பெட்டைக்கோழி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடித்துக் கொடுப்பாள். விமர்சி செய்திருந்தாள். ஆனால் அமலா
வீட்டுப் போவாள். இரவில் இனி வந்தால் கூட தனக்கும் ஜேர்மன்
வீட்டுக்கு வந்து அவளுக்குத் தெரி காரிலும் இடையில் தொந்தரவு
தரவு கொடுத்தான் பாஸ்கர். இருக்காது, எனத் திட்டமிட்டு, அம
மினி நாயிது என்றால் பூனை நாளையும் வரும்படி சொன்னாள்.
கோவுக்குப் போய் வீட்டு அமலாவிடம் அவன் பயந்தாற்
விடும்போது ஜேர்மன் காரி தானே அவள் வீட்டுச் செல்ல
நாயைக் கூட்டிக் கொண்டு வந்து வேண்டும். அதற்கான எல்லா
திட்டமாகும் அடிப்பாள். ஆனால் ஒருங்குகளும் செய்யப்பட்டன.
அமலாவின் நிலை பெல்லாம் ஆங்கிலப் பாடல்களின்
பணத்துக்காக ஆசைப்பட்டு உரத்த சத்தத்துடன் ஜேர்மன்
தன்னைக் கிளைத்துத் தள்ளிய காரி முன்னுக்கு இருக்க, வேகம்
பெருகிறையே சுற்றிச் சுற்றி யுடன் அமலா பின்னால் இருக்க,
சென்றது. சுமார் 80 மைல்களுக்கள் 190 K.M

பாஸ்கர் - அமலாவின் வாழ்வு வேகத்தில் செல்கின்றது. பாடல்
இவ்வாறு நடந்தது. ஒருநாள் காலின் திசையிலும் வீதியின்
பாஸ்கர் விடுமுறைக்கு வேறு ஒரு போனையிலும். ஜேர்மன் மாதுவின்
கிடைத்திருக்க போவதென வேறு இருக்கத்திலும் பாஸ்கர் காரைச்
ஓட்டினான். கால் வருடங்கள் செலுத்திக் கொண்டிருக்கின்றான்.
அவனுடன் வாழ்ந்த வேறு பாவம் பாஸ்கர், இந்த
அமலாவும் நாளும் வரப்போவ பாதையில் சென்று கொண்டிருந்த
நாகத் தெரிந்தாள். பாஸ்கர் - கார். பாதை விலகியது. பள்ளத்
தில் அது பயக்கவில்லை. கார தங்கை நோக்கிச் சென்றது. திடீ
ரெனும் அவன் ஜேர்மன் காரியுடைய அந்தக் கார் பள்ளத்தில்
டுகளை போவதற்கு வேறு ஒழிந்து தீப்பிடித்தது. வேகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மோகமாகச் சென்றனர். வேதனைகள் நிறைந்த, அமலாவின் "கொழும்பிலிருந்து ஜேர்மனி வரை" மட்டுமே இருந்தது.

அமலாவின் ஆத்மா சாந்தியடைய எமது பிரார்த்தனைகள். அமலா மட்டுமல்ல எத்தனையோ பெண்கள் வெளிநாட்டுக்கு வந்தபின்பு இப்படித்தான் ஏமாற்றப்பட்டனர். பெற்றோர்களே! பணத்தைக் கண்டு மருளாதீர்கள்! பெண்ணின் எதிர்கால வாழ்க்கையைப் பாருங்கள்! சொந்தத் தாய் நாட்டின் மண்ணின் வாசனையை விரும்பும் மாப்பிள்ளையைத் தெரிவு செய்யுங்கள். வெளிநாட்டு மாப்பிள்ளையின் பூர்வீகத்தை ஆராய்ந்த பின்பு பெண்ணை வெளிநாட்டுக்கு அனுப்புங்கள். தயவு செய்து பணத்தைக் கண்டு மகளின் வாழ்க்கைக்கு உலை வைக்க வேண்டாம்.

வெளிநாட்டு மோகம் கொண்டவன் தாய் நாட்டை மட்டுமல்ல பெற்ற தாயையும் மறந்து விடுவான். வெளிநாட்டு மண்ணின் மகிமை அது.

## ST. PATRICK'S DAY

சம்பத்திரிசியார் கல்லூரிப் பழைய மாணவர்கட்கு வணக்கம்!

நாம் இவ்வாண்டு சம்பத்திரிசியார் விழாவை மேற்கு ஜேர்மனியில் சிறப்பாக நடாத்த உத்தேசித்து இது விடயமாக பழைய மாணவர்கள் அனைவரையும் தொடர்பு கொள்ள முயற்சிக்கிறோம். எமது முயற்சி வெற்றியளிக்க தாங்கள் அனைவரும் பெயர் பிறந்த திகதி, திருமணமானவரா / இல்லையா? என்ற தகவல்களை கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் இது விடயமாக தங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.

W. GUTSS,
ND. RAMSTAEDTER STR. 179 A/2,
6100 DARMSTADT
WEST GERMANY.

நன்றி-வணக்கத்துடன்
பழைய மாணவர்கள்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலமை

கவிஞனுடைய அம்பறாத் தூணியிலே மிகச் சிறந்த பாணம் எது என்று கேட்டால், 'உவமைதான்' என்று தயங்காமல் சொல்லிவிடலாம். இரண்டு பொருள்களுக்கு இடையே இருக்கிற ஒரே ஜாடையை எடுத்துக் காட்டுவதற்கு உவமை உதவியாயிருக்கிறது. ஆகையால் அது ஒரு உன்னதமான காவியக் கருவி என்று கிரேக்க ஞானியான அரிஸ்டாட்டில் வற்புறுத்தி இருக்கிறார்.

உவமையின் மந்திர சக்தியை ஷெல்லி என்ற ஆங்கிலக்கவிஞன், அரிஸ்டாட்டிலைப்போல் நுட்பமாக உணர்ந்தவன். ஆகவே, அவன் என்ன சொல்லுகிறான்? சிருஷ்டியிலே, உருவத்தாலும், பண்பாலும் வேற்றுமைப்பட்டு போலத்தோன்றும் பொருள்கள் பல. அவைகளுக்கு இடையேயிருக்கும் பரஸ்பர ஒற்றுமை பாமர மக்களுடைய சிருஷ்டிக்குப் படுவதில்லை ஆனால், கவிஞனே தன்னுடைய காவிய உள்ளத்தால் அந்த ஒற்றுமையைக் கண்டுபிடித்து உவமையின் மூலம் வெளிப்படுத்தி விடுகிறான். இந்தக் கருத்தின் மூலம் ஷெல்லி, உவமைக்கு ஒரு தத்துவ அந்தஸ்தையே கொடுக்கமுயற்சிக்கிறான்.

வாஸ்தவந்தானே! பிரபஞ்சத்திலே இருக்கிற பொருள்கள் எல்லாமே ஒரு நியதிக்குக் கட்டுப்பட்டவை; ஒன்றோடொன்று பிரிக்க முடியாமல் இணைக்கப் பெற்றவை, ஒரு புல், நிலத்தைக் கீறிப் பிளந்து கொண்டு தன் மேனியின் பச்சைப்பகட்டைக் காட்டி மினுக்குவதற்கு முன்னால், பூமி முழுவதுமல்லவா பிரசவ வேதனையில் ஈடுபட்டு அல்லலுறுகிறது!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சூரியனுடைய ஒளிக் கரங்களின் ஸ்பரிசம் பட்டமாத் திரத்திலேயே, கூம்பியிருக்கும் தாமரை, மேனி சிலிர்த்து, இதழ்க் கட்டையவிழ்க்கிறது. ஆனால், இப்படியெல்லாம் பொருளுக்கும் பொருளுக்கும் இடையே இருக்கும் ரகசியத்தொந்தம் மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்களுக்கு விளங்குவதில்லை. இறைவனைப்போல, சிருஷ்டி தத்துவத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் கலைஞர்களுக்குத்தான் இவற்றையெல்லாம் இலகுவில் அறியமுடியும், உணர முடியும்.

ஓர் ஆங்கிலக் கவிஞன் அருவியைப் பார்த்தான். " இது கீழ்நோக்கிச் செல்லுகிற புகையைப் (Downward Smoke) போலிருக்கிறது" என்று சொல்லித் தொலைத்தான். இதைப் புகழ்ந்து இங்கிலீஷ் இலக்கிய விமர்சகர்கள் பத்தி, பத்தியாக எழுதித் தள்ளி விட்டார்கள். தமிழ் நாட்டிலே அவர்கள் பிறந்திருந்தால் இப்பேர்ப்பட்ட சில்லறை வர்ணனையையெல்லாம் கண்டு மயங்கியிருக்க மாட்டார்கள். விதம் விதமான உவமைகள், தூக்கிவாரிப்போடுகிற உவமைகள், இயற்கையின் உண்மைகளை ஓர் உலுப்பு உலுப்புகிற உவமைகள் தமிழ்க் கவிதையிலே மலிந்து கிடக்கின்றன.

கம்பன் உவமைகள் ஒவ்வொன்றிலும் ஒரு தனி ரஸமிருக்கும். உவமையென்றால், மின்னல் வெட்டினமாதிரி வந்து விழும். மின்னல் வெளிச்சத்திலே, பேசிக்கொண்டிருக்கிற விஷயம் மாத்திரமல்ல, அந்த விஷயத்தோடு தொடர்புள்ள பலப்பல அரிய உண்மைகளும் தெளிவாகிவிடும்.

மண்ணையும், விண்ணையும் அளாவிச் சேர்த்துக்கட்டி ஒற்றுமைப் படுத்துகின்றன கம்பர் உவமைகள். வாசகர்களை ஏமாற்றி, அவர்கள் உள்ளத்தைப் பறித்து எதிர்பா


www.tamilarangam.net

ராத ஓர் அற்புத லோகத்திலே கொண்டுபோய்ச் சேர்த்து விடுவார் கம்பர். நம்மையெல்லாம் ஒரு நிலையில் வைத்து விஷயத்தைப்பற்றி நேருக்கு நேராகப் பேசிக் கொண்டிருப்பார்; திடீரென்று நம் காலடியிலிருக்கும் செங்கல்லை உருவி விட்டுவிடுவார். அவ்வளவுதான், நிலை தெரியாமல் தடுமாறி, ஒரு புதிய உலகத்துக்கே சென்று விடுவோம், அந்த உவமை வாகனத்தில் ஏறி!

மாரீச மான் போகிற போக்கை வர்ணிக்கிறார் கம்பர். துள்ளிக் குதித்து, மலையையும் வானத்தையும் அளந்து கொண்டே செல்லுகிறது மான். அதைப் பின்பற்றிச் சென்ற ராமனோ, உற்சாகம் இழந்தவனாய்த் திரும்பிப் போகலாமா என்று எண்ணுகிறான். உடனே அது அவன் பக்கத்திலேயே வந்து ஆசைகாட்டுகிறது. விரைந்து பிடிக்கப் போகிறான். மறுபடியும் அது அகன்று விடுகிறது. இப்படியாக மாரீச மான் ராமனோடு கிளியந்தட்டு விளையாடுகிறது.

"குன்றிடை யிவரும், மேகக்
குழுவிடைக் குதிக்கும், கூடச்
சென்றிடில் அகலும், தாழில்
தீண்டலாம் தகைமைத் தாகும்,
நின்றதே போல நீங்கும் — "

இப்படிப் பாய்ச்சல் காண்பித்துக் கொண்டே போகிற மானின் திறமையையும், வஞ்சனையையும், தாள கதியையும் வியந்தவண்ணம் இருக்கிறோம்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





வெளிநாட்டவருக்கான 13.02.90 திகதியிட்ட
புதிய சட்டவிதிகள் பற்றிய விளக்கம்.

மேற்குஜேர்மன் கூட்டரசால் கொண்டுவரப்பட்டு,விரைவில் சட்டமாக்கப்படவுள்ள புதிய சட்டங்கள் பற்றிய விளக்கங்கள் ,அறிவுரையாக கடந்த 17.2.90 அன்று நான்கு மணித்தியாலங்களாக இத்துறையிற் கடமையாற்றிய திரு. டி.லீமா என்பவரால் தமிழ்மக்கள் நன்மைகருதி வகுப்பொன்று நடைபெற்றது.ஈ.த.ந.க.தின் சார்பில் பங்குபற்றிய நாம் இதனைச் செய்தியாகத் தொகுத்துத் தருகின்றோம்.

17.2.90 அன்று பி.பகல் 1.00 மணி முதல் 5.30 மணிவரை மெரிங்கோவ்,2 ஏ 1000 பேர்லின்.1 என்ற விலாசத்தில் இவ்வகுப்பு நடைபெற்றது.

புதிய சட்டமாற்றங்கள் பற்றிய முக்கிய அம்சங்கள்.

1.புதிதாக அகதி விண்ணப்பம் தாக்கல் செய்யவரும் வெளிநாட்டவர்கள் புதிய சட்டத்தின் கீழ் தமது சொந்தநாட்டில் இருக்கும் மேற்குஜேர்மன் ஸ்தானிகரிடம் விசா பெற்று,கடவுச்சீட்டுடன் மட்டுமே வரமுடியும்.ஏனையோர் நாடு கடத்தப்படுவர்.ஐரோப்பிய சமூக நாடுகளைச் சேர்ந்தவர்களை இது கட்டுப்படுத்தாது.

2.மேற்குஜேர்மனில் வாழ்பவர்களுக்குரிய விசா வழங்கலில் மாற்றம் -.புதிய சட்டம்.

3.16 வயதுக்குட்பட்டவர்களும் விசாவைப் பெறுதல் வேண்டும்.

4.விசாப் பெற்று கடவுச்சீட்டுடன் வருபவர்களையும் சில கார



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ணங்க ளைக்காட்டித் திருப்பியனுப்பும் அதிகாரம் உண்டு. விசா, கடவுச்சீட்டு இல்லாதவர்களை ஏற்றிவர விமானங்கள் அனுமதிக் கப்படமாட்டாது. இதனை மீறும் விமானிகளுக்கு 5000 மார்க் தண்டம் உண்டு.

விமானங்களில் ஏறுவோரின் கடவுச்சீட்டுக்கள் பெற்றுக்கொண்டே ஏற அனுமதிக்கப்படுவர்.

புதிய அகதிகளாக விண்ணப்பம் செய்பவர்களுக்கு கீழ்க்காணும் தடைகள் விதிக்கப்படும்.

அ. 5 வருட வேலைத்தடை

ஆ. இருக்கும் பகுதியை விட்டு மீறுமை.

இ. வீடு உடன் எடுக்கமுடியாமை.

இவர்களுக்கு அரசியற்சட்டம் 20ன் கீழ் 6 மாத வதிவிட அனுமதி வழங்கல்.

புதியசட்டம் 55,65 ன் கீழ் அகதிகள் விசாரணை முடியமுன் னரே ஒரு வருட டுல்டுங் (திருப்பி அனுப்பக் காத்திருக்கும் பத் திரம்) வழங்குதல். இதன் கீழ் நாடு கடத்த இயலும்.

கொண்டுவரப்படும் புதிய வெளிநாட்டவர் சட்டவிதி 30 ன் கீழ் மனிதாபிமான காரணங்களுக்காக 2 வருட தற்காலிக (அவென்ந்தகால்ட் பெவுக்கினஸ்) வழங்கப்பட்டு, இக்காலத் தில் ஒருவர் திருப்பி அனுப்பப்படலாம். இதற்குரிய காரணங்க ளாக சொந்தநாட்டு நிலைமையில் மாற்றம், குற்றம் என்பன வாகலாம். மேற்படி விசாவை வழங்குபவர் மத்திய உட்துறை அமைச்சர் ஆவர். சகல முடிவுகளும் இவரின் முடிவைப் பொறுத் ததாகும்.

-புதியவிசா நடைமுறை அமைச்சரின் தீர்மானத்தைப் பொ றுத்து மட்டுமே வழங்கப்படும். இவ்வாறு எட்டு வருடங்கள் இருந் த பின்னர் நிரந்தர வதிவிட உரிமை பெற்றுக் கொள்ளலாம்.

www.tamilarangam.net

இது மிகவும் கடினமாகும்.

'பட்சோல்ட் சட்டம்' கொண்டு வரப்பட்டபின்னர் 5 வருடம் தொடர்ந்து வாழ்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட விசா மற்றும் அதற்கு முந்திய நடைமுறைகளும், புதிய வெளிநாட்டவர் சட்டத்தின் கீழ் செல்லுபடியாகாததுடன் சகல சமஉஷ்டி அரசுகளும் புதிய வெளிநாட்டவருக்கான சட்டங்களையே அமுலாக்குதல் வேண்டும்.

வீட்டுவசதி, வேலைப்பத்திரம், சமூக உதவி பெறுதிருந்தால் நிரந்தர வதிவிடம் வழங்கப்படலாம்.

இப்புதிய சட்டத்தின் கீழ் வெளிநாட்டவர் (ஐரோப்பிய சமூக நாடுகளைச் சேர்ந்தவர்கள் தவிர)வருகையைத் தடுத்தலாகும்.

மாணவர்களாக வருபவர்களுக்கு புதிய நடைமுறை விசா(பிவில் லிகுங்) வழங்கப்பட்டு, படிப்பு முடிந்ததும் வெளியேறவேண்டும்.

சமஸ்டி அரசுகள் எந்தவொரு புதிய நடைமுறையையும் கொண்டு வந்தால் உள்நாட்டமைச்சர் அதைத் தடுக்கலாம்.

புதிய சட்டத்தின் கீழ் சகல விண்ணப்பப்(அகதிகள்)பரிசீலனைகளுக்கும் சேவண்டோர்வ் சமஸ்டி நீதிமன்றமே பொறுப்பாகும்.

இன்று உள்நாட்டுச் சண்டை காரணமாகத் தமிழர்கள்'டீ பக்ரோ' அகதிகளாக(மனிதாபிமானத்தின் கீழ்) என்றே கணிக்கப்படுகின்றார்கள். ஒரு நாட்டின் நிலைமை பற்றிய கணிப்பு, புதிய விதிகளின் கீழ் உள்நாட்டுச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படும், இதுவரை நடைமுறை கைவிடப்படும். ஓர் அகதியாக விண்ணப்பித்தவரை மூன்றுவது நாடொன்றிற்கு நாடு கடத்தும் சட்டம் உண்டு.

அகதி விண்ணப்ப விசாரணை தொடர்கையிலேயே அவரை நாடு கடத்த இடம் உண்டு. நடைமுறைத் தாமதங்கள் நீக்கப்படும்.

சட்டத்தரணி ஊடாக விண்ணப்பிப்பது தடுக்கப்படலாம்.



தொடர்... 29 பக்கம்.

www.tamilarangam.net

# பிரைட்டன்

வீடியோ ஆசிய நிலையம்

புதிய, பழைய, தமிழ், கிந்தி திரைப்பட வீடியோ பிரதிகள் விற்பனைக்கும் வாடகைக்கும் உடனுக்குடன் கிடைக்கும். குமுதம், ஆனந்தவிகடன், துக்ளக், பொம்மை, பேசும்படம், ஜெமினிசினிமா, ராணிமுத்து ஆகியவற்றுடன் இதர சஞ்சிகைகளும்

PYRAMID THOMSUN, ECHO, BHARATH

பழைய, புதிய திரைப்பட, பக்தி ஓடியோ கசற்றுகளும், மற்றும் புடவைகள், ஆசிய உணவுப்பொருட்கள் சமையல் உபகரணங்கள் ஆகியன எம்மிடம் நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

BRIGHTAN VIDEO & ASIA SHOP
OESTERMÄRSCH - 37 4600 DORTMUND-1
TEL: 0231/819431 திங்கள் - சனி 10,00 - 20,00

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேல் நாட்டுச் சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்தம் மனைகளில் சுடர்விட்டு ஒளிரட்டும் இக் கலைவிளக்கு

தனிப்பிரதி : 1,50



## கலைவிளக்கின் வெளியீடுகள்

* சிந்திக்கத்தூண்டிய ஜேர்மனிய கலாச்சாரம்.
* கவிதைச்சோலை (பாகம் -1)
* பாலர் பாடல்
* மானிடத்தின் மறுபக்கம் (கட்டுரைத் தொகுப்பு)
* உறவுக்குப் போராட்டம் (சிறுகதைத் தொகுப்பு)
* அழிவின் சுவடுகள் (புதுக்கவிதைகள்)
* சிந்தனைக்குரிய உருவகங்கள் (உருவகக் கதைகள்)
* சிறுவர் களஞ்சியம் (சிறுவர் மலர்)
* கவிதைச்சோலை (பாகம் -2)
* பூகோளம்
* ஆதங்கம் (புதுக்கவிதைகள்)

PHOTO COPIES ARE FREELY DONE BY

# CARITAS

OF DORTMUND AND LÜNEN

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்